# புதுக்கோட்டை நகராட்சி

புதுக்கோட்டை நகராட்சி நகர்மன்றத்தின் நகர்மன்றத் தலைவர் அவர்களின் தீர்மானத்திற்கென கொண்டுவரப்பட்ட சாதாரணக்கூட்டம் மன்றப்பொருள்கள் நாள்: 30.08.2022

<table>
<tr>
<td>பொருள் எண்: 1</td>
<td>நகராட்சி ஆணையாளர் அவர்களது தினசரி நாட்குறிப்பு 2022 ஜுலை மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்:250<br>பதிவு செய்யப்பட்டது</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்: 2</td>
<td>இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களுக்கு 2022–2025 ம் ஆண்டு வரை உள்ள மூன்றாண்டு குத்தகையில் ஒப்படைக்கப்பட்ட நாள் முதல் 31.03.2023 வரை உள்ள காலத்திற்கு உரிமம் அனுபவித்துக்கொள்ள 29.07.2022 அன்று நடைபெற்ற பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் ஆடுவதை சாலையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தில் கலந்து கொண்டவர்களால் கேட்கப்பட்ட ஏலக்கேள்வி மற்றும் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><td rowspan="2">வ.எண்</td><td rowspan="2">உரிம இனம்</td><td rowspan="2">ஏலம் கோரியவர்/ ஒப்பந்தப்புள்ளி அளித்தவர் பெயர் மற்றும் முகவரி</td><td colspan="2">உயர்ந்த பட்ச</td></tr>
<tr><td>ஏலக்கேள்வி<br>(ரூபாயில்)</td><td>ஒப்பந்தப்புள்ளி தொகை<br>(ரூபாயில்)</td></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">ஆடுவதை சாலையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.</td><td>1.திரு.T.பிரகாஷ், த/பெ.தங்கராஜ்,<br>எண்.10, அடப்பன்வயல் 3–ம் வீதி,<br>புதுக்கோட்டை.</td><td>–</td><td>1,51,000</td></tr>
<tr><td>2.திரு.சு.சரவணன்,<br>த/பெ.சுந்தர் ராஜன்,<br>எண்.16, அம்பாள் புரம் 4–ம் வீதி,<br>புதுக்கோட்டை.</td><td>–</td><td>1,47,500</td></tr>
</table>
</td>
<td>தீர்மான எண்:251<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு**<br>**அ)** ஆடுவதை சாலையில் கட்டணம் வசூல் செய்யும் உரிம குத்தகை இனத்திற்கு கடந்த **18.02.2021 , 27.02.2021 , 23.07.2021, 27.08.2021 ,09.09.2021, 25.03.2022, 31.03.2022, 24.01.2022, 08.04.2022, 20.04.2022** மற்றும் **29.07.2022,** ஆகிய பதினொறு முறை பொது ஏல / ஒப்பந்தப்பள்ளி கோரியும் யாரும் ஏலம் கோர முன்வரவில்லை. பதினொறாவது முறையாக **29.07.2022** அன்று ஏலம் கோரப்பட்டதில் திரு.T.பிரகாஷ், என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்பள்ளி தொகை ரூ.**1,51,000/–**க்கு (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பத்தொராயிரம் ) மட்டும் கோரியுள்ளார். இத்தொகை சென்றாண்டு குத்தகை தொகை ரூ. **1,92,920** /–க்கு ரூ. **41,920** /– குறைவாகும். மூன்றாண்டு சராசரி தொகை ரூ.**1,80,542**/–க்கு ரூ.**29,542**/– குறைவாக கோரியுள்ளார். இந்நிலையில் கடந்த **01.04.2021**–முதல் **19.08.2021**– வரை ஏலம் போகாத காரணத்தால் ஏற்கனவே உள்ள குத்தகைதாரர் மூலம் மாதாந்திர அடிப்படையில் வசூல் செய்யப்பட்டு மேற்படி குத்தகைதாரர் இனி வரும் காலங்களில் வசூல் செய்ய இயலாது என எழுத்து பூர்வமாக தெரிவிக்கப்பட்டதால் **20.08.2021**–முதல் மேற்படி ஆடுவதை சாலையில் துறை மூலம் ஒரு பணியாளர் நியமனம் செய்து வசூல் பணி பார்க்கப்படுகிறது. ஒரு பணியாளருக்கு ஆண்டு ஊதியம் ரூ.**3,84,000**/– ஆகிறது. வசூல் செய்வதற்கு டோக்கன் அச்சடிக்க ஆண்டு ஒன்றுக்கு ரூ.**6,000**/– ஆகக்கூடுதல் ரூ.**3,90,000**/– செலவாகிறது. மேலும் ஆடுவதை சாலையில் தினசரி வசூல் மூலம் **01.04.2021** – முதல் **31.03.2022** வரை ஆண்டு ஒன்றிற்கு ரூ.**1,92,920**/– வசூல் செய்யப்பட்டுள்ளது. எனவே துறை மூலம் வசூல் செய்வதால் வருவாயைவிட செலவினம் அதிகமாகிறது. எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளி தொகை சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ.**1,92,920** /– மற்றும் மூன்றாண்டு சராசரி குத்தகை தொகை ரூ.**1,80,542** /–காட்டிலும் குறைவாக இருந்தும் துறை மூலம் வசூல் செய்வதால் ஆகும் அதிக செலவினங்களை தவிர்க்கும் பொருட்டும் ஏலம் கோர யாரும் முன்வராத நிலையில் மேற்படி குத்தகைதாரருக்கு குத்தகை உரிமம் வழங்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br><br>ஆ) அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிம உத்தரவு வழங்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.302/2021/அ4)** | |
| பொருள் எண்: 3 | இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களுக்கு 2022–2025 ம் ஆண்டு வரை உள்ள மூன்றாண்டு குத்தகையில் ஒப்படைக்கப்பட்ட நாள் முதல் 31.03.2023 வரை உள்ள காலத்திற்கு உரிமம் அனுபவித்துக்கொள்ள 29.07.2022 அன்று நடைபெற்ற பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் காந்தி பூங்கா முன்புறம் நகராட்சியால் கட்டப்பட்டுள்ள டாக்ஸி ஸ்டாண்டில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தில் கலந்து கொண்டவர்களால் கேட்கப்பட்ட ஏலக்கேள்வி மற்றும் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது. | தீர்மான எண்:252<br>அனுமதிக்கப்பட்டது. |

| வ.எண் | உரிம இனம் | ஏலம் கோரியவர்/ ஒப்பந்தப்புள்ளி அளித்தவர் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்த பட்ச | |
|---|---|---|---|---|
| | | | ஏலக்கேள்வி (ரூபாயில்) | ஒப்பந்தப்புள்ளி தொகை(ரூபாயில்) |

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | காந்தி பூங்கா முன்புறம் நகராட்சியால் கட்டப்பட்டுள்ள டாக்ஸி ஸ்டாண்டில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 1.திரு.கே.சுப்பையா, த/பெ.கருப்பையா, எண்.1228, கம்பன் நகர், புதுக்கோட்டை | – | 51,100 |
| | | 2.திரு.கே.ஆர்.கோவிந்தராஜன்,த/பெ.கருப்பையா, எண்.166/1, முள்ளிப்பட்டி, அரசம்பட்டி, திருமயம் (தாலுகா), புதுக்கோட்டை | – | 45,990 |

**அலுவலக குறிப்பு**

அ) இந்நகராட்சிக்கு சொந்தமான காந்தி பூங்கா முன்புறம் நகராட்சியால் நடப்பாண்டில் சுமார் 7 வாடகை கார்கள் நிறுத்துவதற்கு ரூ.6 இலட்சம் மதிப்பீட்டில் டாக்ஸி ஸ்டாண்ட் கட்டப்பட்டு உள்ளது. மேற்படி ஸ்டாண்டை ஆண்டு குத்தகை இனத்தில் இணைத்து 29.07.2022–ல் பொது ஏல / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரிசை எண்.01–ல் கண்டுள்ள திரு.கே.சுப்பையா, த/பெ.கருப்பையா என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வியாக ரூ.51,100/–க்கு கோரியுள்ளதை ஏற்று மேற்படி நபருக்கு உரிம உத்தரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிம உத்தரவு வழங்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.302/2021/அ4).

| | | |
|---|---|---|
| பொருள் எண்: 4 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட காமராஜபுரம் கிழக்கு 35ம் வீதியில் உள்ள மாரியம்மன் வீர ஆஞ்சநேயர் கோவில் அமைந்துள்ள கோவிலுக்கு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 86(சி)ன்படி வரிவிலக்கு அளிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்:61213/2022/அ1) | தீர்மான எண்:253 அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்: 5 | இந்நகராட்சிக்கு சொந்தமான சத்திய மூர்த்தி சாலையில் உள்ள வீட்டு வசதி வாரிய பூங்கா அம்ரூட் திட்டத்தில் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் அதே சாலையில் மற்றொரு பூங்கா உள்ளது. இப்பூங்காக்கள் புதிய பேருந்துநிலையம் அருகில் உள்ளதால் பொது மக்கள் அதிக அளவில் பயன்படுத்துகிறார்கள். எனவே நகராட்சி நிதிநிலையை மேம்படுத்தும் பொருட்டு ஆண்டு குத்தகை | தீர்மான எண்:254 அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | இனங்களில் இரண்டு பூங்காக்களையும் சேர்த்து, வீட்டு வசதி வாரிய பூங்காவிற்கு வைப்புத்தொகை ரூ.2.00 இலட்சம் மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.1.00 இலட்சம் எனவும், மற்றொரு பூங்காவிற்கு ரூ.1.00 இலட்சம் மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.50,000/– எனவும் நிர்ணயம் செய்து 2022 –2023 ஆம் ஆண்டு முதல் பொது ஏல / ஒப்பந்தப்புள்ளி கோரி உரிமம் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>அ) மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று பொது ஏல / ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்–302/2021/அ4) | |
| பொருள் எண்: 6 | இந்நகராட்சிக்கு நவீன வசதிகளுடன் கூடிய புதிய ஒருங்கிணைந்த தினசரி சந்தை கட்டுதல் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அறிவுரையின்படி விரிவான திட்ட அறிக்கையினை தயார் செய்ய Glency Docmra Consultants India Pvt. Ltd , மடிப்பாக்கம் , சென்னை. 91 என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி நிறுவனத்திடம் இருந்து விரிவான திட்ட அறிக்கை தயார் செய்தமைக்கு கட்டணமாக ரூ.4,72,000/– ம் வழங்க கோரி Invoice வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையை Glency Docmra Consultants India Pvt. Ltd , மடிப்பாக்கம் , சென்னை. 91 என்ற நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:–</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண். 3797 /2022/இ1) | தீர்மான எண்:255<br>அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்: 7 | இந்நகராட்சி தூய்மை இந்தியா இயக்கம் (SBM 2.0) திட்டம் 2022ன் கீழ் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு புதிதாக சமுதாய கழிப்பறை கட்டிடம் கட்டுதல் மற்றும் பொதுக்கழிப்பறை கட்டிடம் கட்டுதல் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு, வணக்கம் தமிழகம் நாளிதழில் கடந்த 15.5.2022 அன்று விளம்பரம் செய்தமைக்கு வரப்பெற்ற விளம்பர கட்டணம் ரூ.15,000/– மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:–</u>** மன்றம் அனுமதிக்கலாம். (இ1/242/2022) | தீர்மான எண்:256<br>அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td>பொருள் எண்: 8</td>
<td>புதுக்கோட்டை நகராட்சியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தலைமையிலான அரசின் கீழ் கடந்த ஒருவட காலத்தில் நடைபெற்ற வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்த விபரம் மற்றும் புதுக்கோட்டை நகராட்சிக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வருகை புரிந்தமைக்கும் கீழ்கண்ட நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு வரப்பெற்ற பில் பட்டியலின்படி சம்மந்தப்பட்ட நாளிதழுக்கு உரிய தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
1. தினமலர் நாளிதழ் – ரூ. 25200/–<br>
2. தினமலர் நாளிதழ் – ரூ. 13860/–<br>
3. தினத்தந்தி நாளிதழ் – ரூ. 23600/–<br>
4. தினத்தந்தி நாளிதழ் – ரூ.14160/–<br>
5. தினமணி நாளிதழ் – ரூ.30004/–<br>
<u>அலுவலக குறிப்பு:–</u> மேற்கண்ட நாளிதழிதல்களுக்கு உரிய தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (E1/5073/2022)</td>
<td>தீர்மான எண்:257<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்: 9</td>
<td>புதுக்கோட்டை நகராட்சியில் 2022–2023ம் ஆண்டு பொது நிதியின் கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 28.07.2021 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எ ண்</th><th>பணிகளின் விவரம்</th><th>மதிப்பீடு ரூபாய் லட்சத்தில்</th><th>ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்)</th><th>ஒப்பந்தப்புள்ளி விகிதம்</th></tr>
<tr><td rowspan="2">1)</td><td rowspan="2">இந்நகராட்சிக்குட்பட்ட வார்டுகளில் தெருவிளக்குகள் விடுபட்ட இடங்களில் புதிதாக LED Lamps வாங்கி பொருத்தும் பணி மேற்கொள்ளுதல்.</td><td rowspan="2">5.10</td><td>திரு.R.மணிகண்டன் புதுக்கோட்டை</td><td>மதிப்பீட்டை விட 0.09 % குறைவு</td></tr>
<tr><td>திரு.K.பரமசிவம் புதுக்கோட்டை</td><td>மதிப்பீட்டை விட 0.20 % அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு :–</u><br>
மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. R.மணிகண்டன் ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.09% குறைவு உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம். (E1/5072/2022)</td>
<td>தீர்மான எண்:258<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>பொருள் எண்: 10</td>
<td>
புதுக்கோட்டை நகராட்சியில் ராஜ்ய சபா பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாடுத் திட்டம் 2021–2022ன் நிதியின் கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள 26.07.2021 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.<br>எ<br>ண்</th><th>பணிகளின் விவரம்</th><th>மதிப்பீடு ரூபாய் லட்சத்தில்</th><th>ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்)</th><th>ஒப்பந்தப்புள்ளி விகிதம்</th></tr>
<tr><td rowspan="2">1)</td><td rowspan="2">வார்டு எண்.22 சிறுமின் விசைபம்பு அமைத்தல்</td><td rowspan="2">2.25</td><td>திரு.J.ஆனந்தன்<br>புதுக்கோட்டை</td><td>மதிப்பீட்டை விட<br>0.11 % குறைவு</td></tr>
<tr><td>திரு.K.பரமசிவம்<br>புதுக்கோட்டை</td><td>மதிப்பீட்டை விட<br>0.95 % அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு :–</u><br>
மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.J.ஆனந்தன ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.11% குறைவு உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம். (2421/2022/E1)
</td>
<td>தீர்மான எண்:259<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்: 11</td>
<td>
இந்நகராட்சி 15வது நிதிக்குழு நிதி 2022–2023ன் திட்ட நிதியை எதிர்நோக்கி கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள 26.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.<br>எ<br>ண்</th><th>பணிகளின் விவரம்</th><th>மதிப்பீடு ரூபாய் லட்சதில்</th><th>ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்)</th><th>ஒப்பந்தப்புள்ளி விகிதம்</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">Defect Rectification - Relaying of UGD 600mm dia sewer Damaged pipe fromMHNo:1620F7 To MHNO:1620F2 in Zone-1 of Pudukkottai Municipality UGSS.</td><td rowspan="2">20.00</td><td>திரு.S.கோபி,<br>தஞ்சாவூர்</td><td>மதிப்பீட்டை விட<br>0.02% குறைவு</td></tr>
<tr><td>திரு.S.ரமேஷ்,<br>புதுக்கோட்டை</td><td>மதிப்பீட்டை விட<br>8.57% அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>Defect Rectification - Relaying of UGD 600mm dia</td><td></td><td>திரு.S.கோபி,</td><td>மதிப்பீட்டை விட<br>2.35% அதிகம்</td></tr>
</table>
</td>
<td>தீர்மான எண்:260<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | <table><tr><td></td><td>sewer Damaged pipe fromMHNo:1620F2 To MHNO:1171 in Zone-1 of Pudukkottai Municipality UGSS</td><td>20.00</td><td>தஞ்சாவூர்</td><td></td></tr><tr><td></td><td></td><td></td><td>திரு.S.ரமேஷ்,<br><br>புதுக்கோட்டை</td><td>மதிப்பீட்டை விட 8.59% அதிகம்</td></tr></table><br>**<u>அலுவலக குறிப்பு :–</u>**<br>மேற்கண்ட பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த விலைப்புள்ளிகளையும் மதிப்பீட்டை விட கூடுதலில் குறைவாக உள்ள விலைப்புள்ளிகளையும் கொடுத்துள்ள ஒப்பந்தகாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அனுமதிக்கலாம். (E1/4245/2022) | |
| பொருள் எண்: 12 | இந்நகராட்சி உரக்கிடங்கில் பழைய குப்பைகளை 54,000 மெ.டன் உயிரி மரபு கழிவு செயல்முறையில் தூய்மை படுத்தும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி முரசொலி நாளிதழில் கடந்த 8.6.2022 அன்று விளம்பரம் செய்யப்பட்டதற்கு MCS Communication Private Limited Chennai-92 என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற விளம்பர கட்டணம் ரூ.66,830/–ஐ நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:–</u>** மன்றம் அனுமதிக்கலாம். (3887/2018/E1). | தீர்மான எண்:261 அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்: 13 | இந்நகராட்சியில் 2022–2023 ம் ஆண்டில் வரி மற்றும் வரியில்லா இனங்களில் சொத்துவரி, தொழில்வரி , குடிநீர் கட்டணம் மற்றும் குத்தகை இனங்கள் உள்ளீட்ட நிலுவை தொகைகளை 100 சதவீதம் வசூல் செய்யும் பொருட்டு ஜப்தி செய்திடும் வகையில் 75 எண்ணிக்கை கொண்ட மரச்சட்டத்திலான அறிவிப்பு பலகைகள் செய்வதற்கு உள்ளூர் நிறுவனங்களிடம் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளி விபரங்கள் கீழ்கண்டவாறு உள்ளன.<br><table><tr><th>வ.எண்</th><th>உள்ளூர் நிறுவனங்கள்</th><th>விலைப்புள்ளி தொகை</th></tr><tr><td>1.</td><td>திரு.எஸ்.வாகித் அலி,<br>எண்.49, ராஜவிஜய நகர்,<br>புதுக்கோட்டை.</td><td>ரூ. 2500/–</td></tr><tr><td>2.</td><td>திரு.கே.பரமசிவம்,</td><td>ரூ.2600/–</td></tr></table> | தீர்மான எண்:262 அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>எண்.15, காமராஜபுரம் 1–ம் வீதி,<br>புதுக்கோட்டை</td><td></td></tr>
<tr><td>3.</td><td>திரு.எம்.பழனிவேலு,<br>எண்.L-62, பூங்கா நகர்,<br>புதுக்கோட்டை.</td><td>ரூ.2700/–</td></tr>
</table>
மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண்.01–ல் கண்டுள்ள விலைப்புள்ளி குறைந்த தொகையாக உள்ளதால் மேற்படி விலைப்புள்ளியை ஏற்று உத்தரவு வழங்கிட மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண்.9783/2019/அ1)
<u>அலுவலக குறிப்பு</u> : மன்றம் அனுமதி அளிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள்<br>எண்: 14</td>
<td>
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 08.06.2022 அன்று புதுக்கோட்டை நகருக்கு வருகை புரிந்தமைக்கு நகர் பகுதிகளில் முன்னேற்பாடாக சுகாதாரப்பணிகள் மேற்கொள்ள புதிததாக 1100 லிட்டர் கொள்ளவு கொண்ட குப்பை தொட்டிகள் ( மெட்டல் பின்கள் ) 20 எண்ணிக்கை விநியோகம் செய்யும் பணிக்கு 03.06.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் அளித்த கவி என்ட்டர்பிரைஸஸ் நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கப்பட்டது. அதன்படி 20 எண்கள் குப்பை தொட்டிகள் விநியோகம் செய்யப்பட்டு அதற்கான தொகை வழங்கக்கோரி ரூ.10,57,280.00-க்கு பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.167 நாள்.30.06.2022ன்படி ரூ.10.00 இலட்சத்திற்கு மட்டுமே ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதால் மேற்படி பணிக்கு கூடுதலாக மேற்கொள்ளப்பட்ட செலவுத் தொகை ரூ.57,280.00 கவி என்டர்பிரைஸ் நிறுவனத்திற்கு கீழ் கண்டவாறு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>விநியோகம் செய்யப்பட்ட பொருள்</th><th>அனுமதிக்கப் பட்ட தொகை</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் (ஒரு தொட்டியின் விலை ) ( Excluding GST)</th><th>மொத்தம்</th><th>பட்டியல் தொகை</th><th>கூடுதல் தொகை</th></tr>
</table>
</td>
<td>தீர்மான எண்:263<br>அலுவலக குறிப்பு ஏற்று<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1100 லிட்டர் கொள்ளளவு கொண்ட குப்பைத் தொட்டிகள் ( மெட்டல் பின்) விநியோகம் செய்தல் | ரூ.10.00 இலட்சம் | ரூ.44800.00 | ரூ.896000.00 | ரூ.896000.00<br>CGST 18%<br>ரூ.80640.00<br>SGST18%<br>ரூ.80640.00 | ரூ.57,280.00 |
| மொத்தம் | | ரூ.44800.00 | ரூ.896000.00 | ரூ.10,57,280.00 | ரூ.57,280.00 |

அலுவல குறிப்பு :-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினம் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (4150/2022/எச்3)

---

பொருள் எண்: 15

இந்நகராட்சி அலுவலக பொது சுகாதாரப்பிரிவு பயன்பாட்டிற்கு தேவையான கிருமிநாஷினி பொருட்கள் கொள்முதல் செய்யும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.421 நாள்.13.01.2022 ஒப்புதல் வழங்கப்பட்டு கீழ் கண்டுள்ள கிருமிநாஷினி பொருட்கள் விநியோகம் செய்யும் பணிக்கு 05.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதில் கீழ் கண்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | விநியோகம் செய்யப்படும் பொருட்கள் | அளவு | விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனங்கள் | |
|---|---|---|---|---|
| | | | ஸ்ரீஅம்மன் டிரேடர்ஸ் நாமக்கல் | ஸ்ரீ மோனிகா ஃபேப் திருச்சி |
| | | | ( Rate with 18% GST ) | |
| 1 | லெமன்கிராஸ் ஆயில் | ஒரு லிட்டருக்கான விலை | ரூ.2915/- | ரூ.3009/- |
| 2 | ரெடிமிக்ஸ் Powder | ஒரு கிலோவிற்கான விலை | ரூ.761/- | ரூ.826/- |

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை

தீர்மான எண்:264
அலுவலக குறிப்பு ஏற்று

அனுமதிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | விகிதம் அளித்துள்ள ஸ்ரீஅம்மன் டிரேடர்ஸ், நாமக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம். (5800/2022/எச்3) | |
| பொருள் எண்: 16 | இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய அரணமயனை சாலையில் நகரளவு எண்:3594ல் அமைந்துள்ள புதிய நகராட்சி அலுவலக கட்டிடத்தின் இரண்டாவது தளத்தில் 355 சதுரமீட்டர் அளவுள்ள கட்டிடத்தை மாத வாடகைக்கு வழங்கக்கோரி உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை அலுவலகம், புதுக்கோட்டை அவர்களால் 20.06.2022ம் தேதியிட்டு வரப்பெற்றுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** இந்நகராட்சியின் நிதிநிலையை மேம்படுத்தும் பொருட்டு இவ்வலுவலக பொறியியல் பிரிவின் மூலம் சொத்து மதிப்பு மற்றும் வாடகை மதிப்பை கணக்கீட்டு செய்து மாத வாடகை ரூ.30,000/-ம் மற்றும் வைப்புத்தொகை ரூ.1,80,000/- எனவும் நிர்ணயம் செய்து வழங்கப்பட்டுள்ளபடி மாத வாடகைக்கு விட மன்றம் அனுமதி அளிக்கலாம் (5958/2022/அ4) | தீர்மான எண்:265. ஒத்திவைக்கப்பட்டது |
| பொருள் எண்: 17 | இந்நகராட்சிக்கு சொந்தமான பாதாள சாக்கடை அடைப்பு அகற்றும் TN55 AP 7600 வாகனத்திற்கு (Jet Roding Machine) 2022-2023ம் ஆண்டிற்கான காப்பீட்டு (Insurance ) தி ஓரியண்டல் இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு ஆகும் உத்தேச தொகை ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம் (6510/2022/இ2) | தீர்மான எண்:266 அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்: 18 | இந்நகராட்சிக்கு சொந்தமான வடக்கு சந்தைப்பேட்டை சாலையில் வரிவிதிப்பு எண்:109/518 என்ற எண்ணில் காலியிடம் திரு.எம்.கே.ஜியாவுதீன் என்பவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு உ்ளளது. இந்நிலையில் வருவாய் ஆய்வர் மற்றும் வருவாய் அலுவலர் அவர்களால் கள ஆய்வு செய்யப்பட்டதில் மேற்படி குத்தகைதாரர் இறந்துவிட்டார் என தெரியவருகிறது. எனவே இவவலுவலக குத்தகை இன கோட்பாடுகளின்படி குத்தகைதாரரின் உரிமத்தை ரத்து செய்து மறு ஏலம் கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி அளிக்கலாம் (5959/2021/அ4). | தீர்மான எண்:267 ஒத்திவைக்கப்பட்டது |
| பொருள் எண்: 19 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 25 சத்தியமூர்த்தி சாலை அருகில் அமைந்துள்ள தீரர் சத்தியமூர்த்தி சிலை மற்றும் சுற்றுசுவர் சேதமடைந்தும், வர்ணம் பூச்சும் பழுதடைந்துள்ளதாலும் அதனை சீரமைக்க நகராட்சி ஆணையர் அறிவுறுத்தலுக்கிணங்க இடத்தை ஆய்வு செய்யப்பட்டு மேற்கண்ட இடத்தை சுதந்திர அமுத விழாவினை முன்னிட்டு செப்பணிட உத்தேசமாக செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.61,000/- (ரூபாய் | தீர்மான எண்:268 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | அறுபத்தி ஓராயிரம் மட்டும்) சுதந்திர தினவிழா வருவதை முன்னிட்டு சீரமைக்க வேண்டியுள்ளதால் அவசரம் அவசியம் கருதி நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் பணி செய்யவும் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ள நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்தகாரர் திரு.கே.பரமசிவம், அவர்கள் மூலம் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்:6743/2022/இ1). | |
| பொருள் எண்: 20 | இந்நகராட்சி வார்டு எண்:40 சின்னப்பா நகர் கிழக்கு பகுதியில் மழைநீர் வடிகால் வாய்க்காலின் குறுக்கே சிறுபாலம் கட்டும் பணிக்கு மதிப்பீடு ரூ.5,00,000/-க்கு நகர்மன்ற தீர்மான எண்:217 நாள்:29.07.2022ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பாலத்தின் ஆழம் அதிகமாக உள்ளதென்பது வடிகால் வாய்க்கால் தூர்வாரிய நிலையில் தெரிவித்தது. இதற்கு திருந்திய மதிப்பீடு ரூ.6,50,000/-க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. திருந்திய மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக் குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. திருந்திய மதிப்பீடு மற்றும் கூடுதல் தொகையினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம். (5857/இ1/2022) | தீர்மான எண்:269 அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்:21 | புதுக்கோட்டை நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் 2016 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு இணைப்புகள் வழங்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தில் 10.62 MLD கொள்ளளவு கொண்ட பாதாள சாக்கடை சுத்திகரிப்பு நிலையம் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஐந்தாண்டு காலத்திற்கு 9/2018 முதல் 9/2022 வரையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி ரூ.114.00 இலட்சத்திற்கு வழங்கிய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது.<br>மேலும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ஒப்படைக்கப்பட்ட சுத்திகரிப்பு நிலையத்தின் பராமரிப்பு பணிகளுக்கான காலம் 30.09.2022வுடன் நிறைவடையவுள்ளதைத்தொடர்ந்து மேற்படி பாதாள சாக்கடை சுத்திகரிப்பு நிலைய இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை 01.10.2022 முதல் நகராட்சி மூலம் தொடர்ந்து பராமரிக்க ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், புதுக்கோட்டை அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>பாதாள சாக்கடை சுத்திகரிப்பு நிலைய பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள கீழ் கண்டுள்ள பணியாளர்கள் நியமிக்க வேண்டியுள்ளது. | தீர்மான எண்:270 அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr><td></td><td>

| வ.எண். | பணியாளர் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நிலைய பொறுப்பாளர்(Site Incharge) | 1 |
| 2 | ஆய்வக பொறுப்பாளர்( Lab Chemist) | 1 |
| 3 | ஆபரேட்டர் ( Electrician ) | 1 |
| 4 | ஆபரேட்டர் (Mechanic) | 1 |
| 5 | காவலர் | 2 |
| 6 | தோட்டக்காவலர் | 2 |

மேற்படி பாதாள சாக்கடை சுத்திகரிப்பு நிலையத்தினை 01.10.2022 முதல் தொடர்ந்து பராமரிக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் அல்லது தனியார் தொழில்நுட்ப நிறுவனம் மூலம் ஒப்பந்தப்புள்ளி கொரி பாதாள சாக்கடை சுத்திகரிப்பு நிலையம் ஐந்தாண்டு காலம் வரையில் ஆண்டு பராமரிப்பு மற்றும் இயக்கம் செய்ய ஆகும் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். (6025/2002/இ2)
</td><td></td></tr>
<tr><td>பொருள் எண்:22</td><td>
இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 42 வார்டுகளில் புதுக்கோட்டை நகராட்சியுடன் 2011 ஆம் ஆண்டு முதல் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளான 1, 2, 3, 41 மற்றும் 42 ஆகிய பழைய வார்டுகளுக்கும் ( தற்சமயம் புதிய வார்டு 1, 2, 3, 4, 5 Part, 10 Part, 11 Part, 32 Part, 34 Part, 39, 40, 41, 42 ) ஆகிய வார்டுகளை தவிர மற்ற வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

பாதாள சாக்கடை திட்டம் அமைக்கப்பட்டுள்ள பகுதிகளை இரண்டு மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. தஞ்சாவூர் சாலையிலிருந்து மதுரை சாலையில் வலது புறமாக உள்ள பகுதிகளை மண்டலம் - 1 ( Zone-1) ஆகவும், இடதுபுறம் உள்ள பகுதிகளை மண்டலம் - 2 ( Zone-2) ஆகவும் பிரிக்கப்பட்டுள்ளது, மேற்படி திட்டத்தில் 151.00 மீட்டர் நீளத்திற்கு பிரதான கழிவுநீர் குழாய்களும், 5554 ஆழ்நுழைவு தொட்டிகளும் ( Man Hole) அமைக்கப்பட்டு பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் 151.00 மீட்டர் நீளத்தில் உள்ள பிரதான கழிவுநீர் குழாய்கள் மற்றும் 5554 ஆழ்நுழைவு தொட்டிகளில் அவ்வப்போது ஏற்படும் அடைப்புகளை சரிசெய்திடவும், மண்படிவங்களை அகற்றி சுத்தம் செய்திடவும், ஆழ்நுழைவு தொட்டிகளை பராமரிப்பு இரண்டு மண்டலங்களிலும் வருடாந்திர பராமரிப்பு பணிகள் மற்றும் கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ள தகுதிவாய்ந்த நிறுவனம் மூலம் ஒப்பந்தப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின்
</td><td>தீர்மான எண்:271<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு.. மன்றம் அனுமதிக்கலாம் (6674/2022/E2) | |
| பொருள் எண்:23 | இந்நகராட்சி வார்டு எண். 41ல் உள்ள குன்னான்குளம் கலிங்கி வடிகால் எடுக்கப்பட்டதை நகரமைப்பு பிரிவு ந.க.எண்.6374/2021/எப்1, நாள்.26.7.2021 மற்றும் வட்டாட்சியரின் கடிதம் ந.க.எண்:அ1/38502/2021ல் தெரிவித்துள்ளதின்படி வடிகால் வாய்க்காலை தூர்வாரி சுத்தம் செய்யும் பணி மேற்கொள்ளவும், உடைந்த கலிங்கியினை பழுது மேற்கொள்ளவும் தயார் செய்யப்பட்ட உத்தேச செலவினம் ரூ.1,50,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 6258 /2022 /இ1) | தீர்மான எண்:272<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்:24 | இந்நகராட்சி குடிநீர் விநியோகம் செய்வதற்கு தேவையான குளோரின் வாயு, தினமும் குடிநீரில் சுகாதார நலன் கருதி குளோரின் வாயு கலக்கும் இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது. இவ்வறை திருவப்பூர் ரயில்வேகேட் அருகில் உள்ளது. இங்கு புதிதாக அமைக்கப்பட்ட குளோரின் வாயு உருளை (Cylinders) தற்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு சிலிண்டர் 20 முதல் 25 நாட்களுக்கு பயன்பாட்டில் வரும். அதன்பின் புதிய சிலிண்டர் வாங்கி பொருத்தம் செய்யவேண்டியது அவசியமாகிறது.<br><br>ஏனவே அம்மையாபட்டி குடிநீருக்கும், காவேரி குடிநீருக்கும் குளோரின் வாயு சிலிண்டர் சப்பளை செய்ய ஓர் ஆண்டிற்கு மட்டும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.7,80,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.(6730/202/E1). | தீர்மான எண்:273<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்:25 | இந்நகராட்சி அம்மையாபட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் கூடுதலாக நீர் உறிஞ்சு கிணறுகள் அமைத்து குடிநீர் விநியோகம் மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்கள் கூறியதின்படி பணி மேற்கொள்ளவும், ஆய்வுகள் செய்து திட்ட பிரேரனை சமர்பிக்கவும், மூன்றாம் நபர் மூலம் தயார் செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>இப்பணியின் ஆற்றின் தண்ணீரை பகுத்தாய்வு செய்யவும், புதிதாக அமைக்கப்படவுள்ள கிணறுகளின் இடம் ஆய்வு செய்யவும், அவ்விடத்தில் உள்ள நீரினை பகுத்தாய்வு செய்யவும் இவைகளுக்கு ஏற்றார்போல் திட்ட வடிவமைப்பு செய்து மதிப்பீடு தயார் செய்யவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/–க்கு மன்றத்தின் | தீர்மான எண்:274<br>அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம். (6725/2022/E1) | |
| பொருள் எண்:26 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1ல் கோனார் தெரு, நரிமேடு 10ம் வீதி மற்றும் சமத்துவபுரம் பூங்கா ஆகிய இடங்களில் உள்ள சிறுமின் விசைபம்பு பழுதாகி உள்ளது என்று நகர்மன்ற உறுப்பினர் கொடுக்கப்பட்ட மனுவின் அடிப்படையில் இடத்தை ஆய்வு செய்யப்பட்டது. மேற்கண்ட இடத்தில் மோட்டார், பேனல் போர்டு மற்றும் இதர பொருட்கள் பழுதாகி உள்ளது. அதனை சீரமைக்க உத்தேசமாக செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2,60,000/–இலட்சம் (ரூபாய் இரண்டு இலட்சத்தி அறுபத்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம். (6728/2022/E1) | தீர்மான எண்:275 அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்:27 | இந்நகராட்சி வார்டு எண்.39 நியூடைமண்ட் நகர் மற்றும் வீரமுத்து நகர் ஆகிய பகுதிகளில் உள்ள சாலை குண்டும் குழியுமாக உள்ளதால் கப்பி தளம் (WMM) அமைத்து செப்பணிட நகர்மன்ற தலைவர் அவர்களின் கோரியுள்ளதின்படி அதற்கான மதிப்பீடு ரூ.55,000/– மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம். (6734/2022/E1) | தீர்மான எண்:276 அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்:28 | இந்நகராட்சி திருவப்பூர் நகராட்சி நடுநிலைப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளியில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு எந்திரம் பழுதடைந்துள்ளதை பழுது நீக்கம் செய்து பயன்பாட்டுக்கு கொண்டு வரும் பொருட்டு பெறப்பட்டுள்ள விலைப்புள்ளி ரூ.30,000/– அக்குவா Ro சிஸ்டம்ஸ், திருச்சி அவர்களிடம் ஒப்படைப்பு செய்து பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம் (5854/2022/E1) | தீர்மான எண்:277 அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்:29 | இந்நகராட்சி சாந்தநாதபுரம் மற்றும் கலீப் நகர் பள்ளியில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு எந்திரம் பழுதடைந்துள்ளதை பழுது நீக்கம் செய்து பயன்பாட்டுக்கு கொண்டு வரும் பொருட்டு பெறப்பட்டுள்ள விலைப்புள்ளி தொகை ரூ.25,000/– நைல் அக்குவா Ro சிஸ்டம்ஸ், திருச்சி, அவர்கள் மூலம் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம் (5858/2022/E1) | தீர்மான எண்:278 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| பொருள் எண்:30 | இந்நகராட்சி வார்டு எண். 19 திருக்கோகர்ணம் மற்றும் வார்டு 28 காந்தி நகர் பள்ளியில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு எந்திரம் பழுதடைந்துள்ளதை பழுது நீக்கம் செய்து பயன்பாட்டுக்கு கொண்டு வரும் பொருட்டு பெறப்பட்டுள்ள விலைப்புள்ளி தொகை ரூ.35,000/– நைல் அக்குவா Ro சிஸ்டம்ஸ் , திருச்சி அவர்கள் மூலம் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:–</u>** மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.இப்பணியினை கல்வி நிதியில் மேற்கொள்ளலாம் (5855/22/இ1) | தீர்மான எண்:279 அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்:31 | இந்நகராட்சி வார்டு எண்: 42 அசோக் நகர் வார்டு எண்: 33 உசிலங்குளம் பள்ளியில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு எந்திரம் பழுதடைந்துள்ளதை பழுது நீக்கம் செய்து பயன்பாட்டுக்கு கொண்டு வரும் பொருட்டு பெறப்பட்டுள்ள விலைப்புள்ளி தொகை ரூ.35,000/– நைல் அக்குவா Ro சிஸ்டம்ஸ், திருச்சி, அவர்கள் மூலம் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம் (5856/2022/E1) | தீர்மான எண்:280 அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்:32 | இந்நகராட்சிக்குட்பட்ட போஸ் நகர் நுண் உரம் தயாரிக்கும் மையத்தில் (MCC) வாழை மட்டை அரைக்கும் இயந்திரம் வைப்பதற்கும், மையத்தின் மேற்புறம் பக்கவாட்டில் இடைவெளி இருப்பதால் அதன் வழியாக அவ்வப்போது குரங்குகள் வந்து மின்சாரம் ஒயர், விளக்குகள் மற்றும் பொருட்களை சேதமாக்கி விட்டு செல்கின்றன. ஆகவே அதனை சீரமைக்க நகராட்சி ஆணையர் மற்றும் நகர்நல அலுவலர் அறிவுறுத்தலுக்கிணங்க பாதுகாப்பை கருத்தில் கொண்டு மேற்கண்ட இடத்தில் Weld Mesh அமைப்பதற்கும் தோராயமாக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4,50,000/– (ரூபாய் நான்கு இலட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு:–</u>** மன்றம் அனுமதிக்கலாம். (6738/2022/E1) | தீர்மான எண்:281 அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்:33 | இந்நகராட்சி புதிய பேருந்து நிலையம் கான்கிரீட் கூரை மற்றும் தூண்கள் ஆங்காங்கே வெடித்து காணப்படுகிறது. இதனால் அவ்வப்போது பெயர்ந்து விழுகின்றது. கடந்த 28.07.2022ம் தேதி பேருந்து நிலைய கடையின் மேற்கூரையின் சிமெண்ட் கான்கிரீட் பெயர்ந்து விழுந்தது. இதனால் பயணி ஒருவர் காயமடைந்தார்.<br>இதன் பொருட்டு கட்டிடத்தின் ஸ்திரததன்மையை ஆய்வு மேற்கொள்ள National Institute of Technology (NIT) திருச்சி அவர்களுக்கு கோரப்பட்டதில் அன்று ஆய்வு செய்து அறிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளார்கள். சுமார் 42 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட இக்கட்டிடம் முற்றிலும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் இக்கட்டிடங்களை பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது என தெரிவித்துள்ளார்கள். | தீர்மான எண்:282 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | இதன் பொருட்டு பேருந்துநிலையத்தில் உள்ள கடைகளை இடித்திடும் பொருட்டு அங்குள்ள கடைகளை இடித்திடவும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் ஒப்புதல் பெறவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:–</u>** மன்றம் அனுமதிக்கலாம். (E1/6737/2022) | |
| பொருள் எண்:34 | இந்நகராட்சி சமத்துவபுரம் பள்ளி, தைலா நகர் பள்ளி மற்றும் அசோக் நகர் பள்ளிகளின் உள்ள கதவுகள் மற்றும் ஜன்னல்கள் முகப்பு கேட்டுகள் பழுதடைந்துள்ளதை பழுது நீக்கம் செய்யும் பொருட்டு உத்தேச செலவினம் ரூ.20,000/– மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:–</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம் கல்வி நிதியில் மேற்கொள்ளலாம்.<br>2. இப்பணியினை நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் மேற்கொள்ளப்பட்டதையும் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தகாரர் Lucas Fabricators அவர்களின் மூலம் பணி மேற்கொள்ளப்ட்டதையும் மன்றம் ஏற்கலாம். (6736/202/E1) | தீர்மான எண்:283<br>அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்:35 | இந்நகராட்சி அம்மையாப்பட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து பம்பிங் செய்யப்படும் குடிநீர் நகராட்சி வார்டு எண்:39க்கு உட்பட்ட லட்சுமிநகரில் உள்ள தரைநிலை நீர்த்தேக்க தொட்டியில் சேகரிக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி குடிநீர் சேமிப்பு தொட்டியின் உட்புறம் பாசிபடிந்து மண்சேர்ந்துள்ளது. மேலும் தொட்டியின் உட்புறம் உள்ள நீர்மூழ்கி மோட்டர்கள் பழுதடைந்துள்ளது.<br><br>மேற்படி குடிநீர் சேமிப்பு தரைநிலை நீர்த்தேக்க தொட்டியினை சுத்தம் செய்து சிமிண்ட் வாஷ் செய்யவும் பழுதடைந்த மோட்டர்களை பழுதுநீக்கம செய்யவும் ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினம் குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (6735/2022/E1) | தீர்மான எண்:284<br>அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்:36 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு தெருக்களில் அதிக இடங்களில் தெருவிளக்குகள் இல்லை. நகர்மன்ற உறுப்பினர்களிடமிருந்து தெருவிளக்குகள் அமைத்துதரக்கோரி வரப்பெற்ற புகார்களைத் தொடர்ந்து தெருவிளக்குகள் அமைக்க வேண்டிய பகுதிகள் நேராய்வு செய்யப்பட்டு தெருவிளக்குகள் இல்லாத இடங்களில் புதிய தெருவிளக்குகள் அமைக்க நிர்வாக அனுமதி வேண்டி அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. தற்பொழுது நகரின் முக்கிய சாலைகளில் தெருவிளக்குகள் அவசியம் அமைக்க வேண்டியுள்ளதால் அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.12.40 இலட்சம் (ரூபாய் பன்னிரண்டு இலட்சத்தி | தீர்மான எண்:285<br>அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr><td></td><td>நாற்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:–</u> மன்றம் அனுமதிக்கலாம். (6734/2022/E1)</td><td></td></tr>
<tr><td>பொருள் எண்:37</td><td>இந்நகராட்சி வார்டு எண்.24 காட்டுபுதுக்குளம் கரை மற்றும் அதன் வாய்க்கால் வாரி சுத்தம் செய்து சில்ட் மண் அள்ளவும், மேல்புறம் கருவை முள் அகற்றவும் , நகர்மன்ற தலைவர் அவர்களின் உத்தரவின்படி எதிர்வரும் மழைகாலத்தினை முன்னிட்டு சந்தைப்பேட்டை முதல் இம்பாலா காட்டுப்புதுக்குளம் வரை சுத்தம் செய்யும் பொருட்டு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.1,25,000/– மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:–</u> மன்றம் அனுமதிக்கலாம். (6733/2022/E1)</td><td>தீர்மான எண்:286 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள் எண்:38</td><td>இந்நகராட்சி வார்டு எண்:19 கல்யாணராமபுரம் 1, 2 வீதியில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கு ஏற்கனவே தீர்மானம் எண்:610 நாள்:24.02.2021ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டுத்தொகை ரூ.6,55,000/- மன்றத்தின் பார்வைக்கும், ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை செய்யவும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (6573/2022/இ1)</td><td>தீர்மான எண்:287 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள் எண்:39</td><td>புதுக்கோட்டை நகராட்சியில் 2022–2023ம் ஆண்டு பொது நிதியின் கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 16.08.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது 1) Vishnu Traders,2) Udhayam Construction இவற்றில் Pre qualification criteria அடிப்படையில் Vishnu Traders நிறுவனம் தகுதிபெற்றுள்ளது. இந்த ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு.<br><table><tr><td>வ. எ ண்</td><td>பணிகளின் விவரம்</td><td>ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்)</td><td>ஒப்பந்தப்புள்ளி விகிதம்</td></tr><tr><td>1)</td><td>Invite Proposal and bids from intererested food service providers for providing morning Break fast to the Pudukkottai Municipal primary school children under chief ministers breakfast scheme to school children (CMBFS) for an expected period of three years</td><td>Vishnu Traders, Pudukkottai</td><td>ரூ.12.70/–<br>ஒரு பாக்கெட்</td></tr></table></td><td>தீர்மான எண்:288 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr><td></td><td><u>அலுவலக குறிப்பு :–</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி முதலமைச்சர் அவர்களின் சிறப்பு திட்ட பணியாக இருப்பதால் நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். (5698/2022/E1)</td><td></td></tr>
<tr><td>பொருள் எண்:40</td><td>புதுக்கோட்டை நகராட்சிக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் பயன்பாட்டிற்கும் , நகராட்சி ஆணையாளர், பொறியாளர் மற்றும் நகர் நல அலுவலர் அவர்களின் பயன்பாட்டிற்கும் புதிய வாகனம் வாங்க இந்நகர்மன்ற தீர்மானம் எண்.23 நாள்.08.04.2022ன்படி ஒப்புதல் வழங்கப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் உத்தரவு ந.க.எண்.109290/2022/எம்3 நாள்.17.05.2022ன்படி நகர்மன்ற தலைவர் அவர்களின் பயன்பாட்டிற்கு ஒரு ஸ்கார்பியோ ஈப்பு வாகனமும் , ஆணையாளர், பொறியாளர் மற்றும் நகர்நல அலுவலர் அவர்களின் பயன்பாட்டிற்கு மூன்று எண்ணிக்கை பொலிரோ வாகனங்களும் GEM விலைவிகிதத்தில் வாங்க அனுமதி வழங்கப்பட்டது.<br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க. எண்.1725/2022/எம்3 நாள் 24.05.2022 ஆம் தேதிய கடிதத்தின்படி நகராட்சிகளுக்கு அனுமதியளிக்கப்பட்ட வாகனங்கள் நகராட்சி நிர்வாக இயக்குநரகம் , சென்னை மூலம் Mahindra & Mahindra நிறுவனத்திடமிருந்து மொத்தமாக கொள்முதல் செய்யப்பட்டது. புதுக்கோட்டை நகராட்சி வாகனங்களுக்கான தொகை நகராட்சி மூலம் மேற்படி நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டு 1.08.2022 அன்று நகராட்சி ஓட்டுநர்களால் வாகனங்கள் பெற்று வரப்பட்டது.<br>புதிததாக வாங்கப்பட்ட வாகனங்களுக்கு காப்பீடு மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு அதற்கான கட்டணங்களும் செலுத்தப்பட்டுள்ளது.<br>மேற்கண்ட நான்கு வாகனங்கள் கூடுதல் பொருத்திகள் ( EXTRA FITTINGS ) ஏதுமின்றி GEM விலை விகிதத்தில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதால் 1 ஸ்கார்ப்பியோ மற்றும் 3 பொலிரோ வாகனங்களுக்கு தேவையான EXTRA FITTINGS ஹாரன், சீட் கவர், புட் ஸ்டெப், மேட், ஸ்டிக்கர் , Name Plate , Number Plate போன்ற கூடுதல் Fittings பொருத்த வேண்டியுள்ளது. மேற்கண்ட வாகனங்களுக்கு EXTRA FITTINGS வாங்கி பொருத்த உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து கீழ் கண்டுள்ளவாறு விலைப்புள்ளிகள் நேரடியாக பெறப்பட்டுள்ளது.<br><table><tr><td>வ.எண்,</td><td>வாகனங்கள் விவரம்</td><td colspan="3">Extra Fittings -க்கு விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனங்கள் விவரம்</td></tr><tr><td></td><td></td><td>அன்னை ஆட்டோ ஒர்க் புதுக்கோட்டை</td><td>ஸ்ரீ லெட்சுமி ஆட்டோ கேரியர் புதுக்கோட்டை</td><td>ஸ்ரீகணபதி மோட்டார்ஸ் புதுக்கோட்டை</td></tr><tr><td>1</td><td>ஸ்கார்ப்பியோ ஈப்பு</td><td>ரூ.53600.00</td><td>ரூ.57300.00</td><td>ரூ.48300.00</td></tr></table></td><td>தீர்மான எண்:289<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | 2 · பொலிரோ - 1 · ரூ.59900.00 · ரூ.52550.00 · ரூ.49850.00<br>3 · பொலிரோ - 2 · ரூ.59900.00 · ரூ.52550.00 · ரூ.49850.00<br>4 · பொலிரோ - 3 · ரூ.59900.00 · ரூ.52550.00 · ரூ.49850.00<br>மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும்,முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:-<br>1. மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் அளித்துள்ள ஸ்ரீகணபதி மோட்டார்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கு ஆகும் செலவினம் ரூ.1,97,850/- நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.2048/2022/இ3). | |
| பொருள் எண்:41 | மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 08.06.2022 அன்று புதுக்கோட்டை நகருக்கு வருகை புரிந்து அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பங்கேற்க உள்ளதால் விழ நடைபெறும் மாவட்ட விளையாட்டு அரங்க வளாகத்தில் தூய்மைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.<br>மழைகாரணமாக மாவட்ட விளையட்டு அரங்க வளாகத்தில் நீர் தேங்கியுள்ளதை ஆயில் என்ஜின் கொண்டு வெளியேற்ற வேண்டியுள்ளது மேலும், விளையாட்டு அரங்க வளாகத்தை சுற்றியுள்ள புல் மற்றும் முட்புதர்களை வெட்டி அகற்றி தூய்மைப்படுத்தும் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது.<br>வாடகை அடிப்படையில் ஆயில் என்ஜின் கொண்டு மழைநீரை வெளியேற்றவும், புல் வெட்டும் இயந்திரம் 4 எண்ணிக்கை புதிததாக விநியோகம் செய்வதற்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டு மேற்படி பணிக்கு 06.06.2022 அன்று விலைப்புள்ளிகள் வரவேற்கப்பட்டது. அதன் விவரம் கீழ் கண்டுள்ளவாறு . | **தீர்மான எண்:290**<br>**அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | பொலிரோ - 1 | ரூ.59900.00 | ரூ.52550.00 | ரூ.49850.00 |
| 3 | பொலிரோ - 2 | ரூ.59900.00 | ரூ.52550.00 | ரூ.49850.00 |
| 4 | பொலிரோ - 3 | ரூ.59900.00 | ரூ.52550.00 | ரூ.49850.00 |

| வ. எண். | பணி விவரம் | அளவு | விலைப்புள்ளி அளித்துள்ள விவரம் | | |
|---|---|---|---|---|---|
| | | | திரு.K.பரமசிவம் ஒப்பந்ததாரர் | திரு.M.பழனிவேல் ஒப்பந்ததாரர் | திரு.S.வாஹித்அலி ஒப்பந்ததாரர் |
| 1 | புதிய புல் வெட்டும் இயந்திரம் விநியோகம் செய்தல் | ஒன்றின் விலை | ரூ.13100/- | ரூ.13000/- | ரூ.12500/- |
| 2 | மாவட்ட விளையாட்டு அரங்க வளாகத்தில் தேங்கியுள்ள மழைநீர் | ஒரு மணி நேரத்திற்கான வாடகை | ரூ.350/- | ரூ.300/- | ரூ.296/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 5HP ஆயில் என்ஜின் கொண்டு வெளியேற்றுதல் | (டீசல்,கூலி உட்பட | | | |

மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு.S.வாஹித் அலி ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியை அங்கீகரித்து பணி உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. புல் வெட்டும் இயந்திரம் 4 எண்ணிக்கைக்கான தொகை ரூ.50,000/- மற்றும் டீசல் என்ஜின் வாடகை தொகை ரூ.17760/- நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதையும் மன்றம் பதிவு செய்யலாம்.(5140/2022/எச்3)

பொருள் எண்:42

03.06.2022 அன்று புதுக்கோட்டை நகராட்சி சார்பில் பழைய பேருந்து நிலையம் அருகில் நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கம் தொடக்க விழாவிற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாவட்ட ஆட்சித் தலைவர், நகர்மன்ற தலைவர், நகர் மன்ற துணை தலைவர், அலுவலக பணியாளர்கள், தொண்டுநிறுவனங்கள், தன்னார்வலர்கள் மாணவ மாணவிகள் போன்றோர் கலந்து கொண்டு விழிப்புணர்வு பேரணி கலைநிகழ்ச்சி நடத்தப்பட்டது. இப்பொருள் தொடர்பாக திரு.எஸ். வாீத் அலி அரசு ஒப்பந்ததாரருக்கு 02.06.2022 அன்று பணிகள் மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதன் படி பணி மேற்கொள்ளப்பட்டமைக்கான தொகைப்பட்டியல் திரு. எஸ். வாீத் அலி என்பவரால் கீழ்கண்டவாறு தொகைப்பட்டியல் வரப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | நாட்டுபுறப்பல்சுவைக் கலைக்குழு | - | 15000/- |
| 2. | சாமியானா பந்தல் மைக்செட் சேர், டேபிள் | - | 34950/- |
| 3. | இரும்பு கூண்டு அமைத்தல் | - | 15000/- |
| 4. | T. SHIRT வழங்கியது | - | 32500/- |
| 5. | தண்ணீர் பாட்டில், பிஸ்கட், டீ, வடை | - | 6000/- |
| 6. | கேமரா, வீடியோ கவரேஜ் | - | 15000/- |
| | | | **1,18,450/-** |

மேற்கண்டவாறு செய்யப்பட்ட பணிகளுக்கான செலவின தொகைகை திரு. எஸ். வாீத் அலி ஒப்பந்ததாரருக்கு வழங்கவும், அவசர அவசியங்கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920

தீர்மான எண்:291
அனுமதிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | பிரிவு 15ன் கீழ் செலவிடவும், பொது நிதியிலிருந்து செலவிடவும், பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (எச்1/4320/2022) | |
| பொருள் எண்:43 | தற்போது அறந்தாங்கி நகராட்சியில் துாய்மை பணியாளராக பணிபுரிந்து வரும் திரு.ஆ. சுப்பிரமணியன் என்பவர் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக புதுக்கோட்டை நகராட்சிக்கு பணியிட மாறுதல் வழங்குமாறு விண்ணப்பித்துள்ளார். அறந்தாங்கி நகர்மன்ற தீர்மானம் எண்: 31 நாள்:29.04.2022ல் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படியாரை புதுக்கோட்டை நகராட்சியில் காலியாகவுள்ள துாய்மை பணியாளர் பணியிடத்திற்கு பணி மாறுதல் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம் (எச்4/5947/2022) | தீர்மான எண்:292<br>அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்:44 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 42 வார்டுகளையும் ஆய்வு மேற்கொள்ளவும் (கோவிட் 19) கொரோனா காலக்கட்டமாக இருப்பதால் ஆய்வு மேற்கொண்டு செல்வதற்கும் இந்நகராட்சியில் நகர் நல அலுவலர் அவர்களுக்கு வாகனம் இல்லாததால் பொது சுகாதாரப்பிரிவு நகர் நல அலுவலர் அவர்களின் பயன்பாட்டிற்கு 1 ஈப்பு வாகனம் வாடகை அடிப்படையில் மேற்கொண்டதற்கு (மார்ச் முதல் ஆகஸ்ட் 2022) ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/-க்கு மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண்:127/எச்2/2022). | தீர்மான எண்:293<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்:45 | இந்நகராட்சிக்கு சொந்தமான தெற்கு ராஜ வீதியில் உள்ள பழைய நகராட்சி அலுவலக கட்டிடம் மற்றும் சத்தியமூர்த்தி தங்கும் விடுதி கட்டிடங்கள் நேரடி ஆய்வு மேற்கொள்ள திருச்சி NITI கல்லூரியில் இருந்து **14.8.2022** அன்று வருகை புரிந்தார். ஆய்வுகள் மேற்கொண்டு சான்று வழங்க கல்லூரிக்கு காசோலை வழங்க கோரியதின்படி சான்று பெற்று நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியத்தை முன்னிட்டு இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் திரு.V.ராஜேஷ், அவரின் மூலம் தொகை செலுத்தி பணி மேற்கொள்ளப்பட்டது. இப்பணியினை ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.**40,000/–** மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:–</u>** மன்றம் அனுமதிக்கலாம். (4816/2022/E1) | தீர்மான எண்:294<br>அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்:46 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். **12, 34**ம் வீதியில் உள்ள மினி பவர் பம்பு பழுதாகி உள்ளது என்று நகர்மன்ற உறுப்பினர் கொடுக்கப்பட்ட மனுவின் அடிப்படையில் இடத்தை ஆய்வு செய்யப்பட்டதில் மோட்டார் மற்றும் ஒயர் பழுதாகி உள்ளதை சீரமைக்க தோராயமாக செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.**62,000/–** குடிநீர் பணி என்பதால் நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் பேரில் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டம் **1920 15**ன் பிரிவின் கீழ் பணி மேற்கொள்ளவும் மற்றும் ஒப்படைப்பு பணியாக நகராட்சியில் பதிவு பெற்ற | தீர்மான எண்:295<br>அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr><td></td><td>ஒப்பந்தகாரர் திரு.K.பரமசிவம் அவர்கள் பணி செய்ய அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:–</u> மன்றம் அனுமதிக்கலாம். <u>(ந.க.எண்.5018/2022/இ1)</u></td><td></td></tr>
<tr><td>பொருள் எண்:47</td><td>இந்நகராட்சி அலுவலக பொறியாளர் பிரிவில் நகராட்சி பொறியாளர் அவர்களுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் மகேந்த்ரா ஈப்பு TN-55-A-9600 கடந்த 4.10.1996 அன்று வாங்கப்பட்டு தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. வாகனம் வாங்கப்பட்டு 26 ஆண்டுகளுக்கு மேலானதால் வாகனம் இயக்குவதில் சிரமம் ஏற்படுகிறது. மேலும் வாகன பராமரிப்பு பணிகளுக்கு மேற்கொள்ளப்படும் செலவினங்கள் அதிகரிப்பதுடன் வாகனம் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு வருகிறது. மேற்படி வாகனத்தை கழிவு செய்து மேல்நடவடிக்கை தொடர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம் . (6635/2022/இ3)</td><td>தீர்மான எண்:296<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள் எண்:48</td><td>புதுக்கோட்டை நகராட்சியில் 2022–2023ம் ஆண்டு பொது நிதியின் கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 22.07.2021 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணிகளின் விவரம்</th><th>மதிப்பீடு ரூபாய் லட்சத்தில்</th><th>ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்)</th><th>ஒப்பந்தப்புள்ளி விகிதம்</th></tr>
<tr><td rowspan="2">1)</td><td rowspan="2">இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 42 கே.எல்.கே.எஸ் நகரில் பழுதடைந்த சிறு பாலத்தினை சீரமைத்தல் பணி மேற்கொள்ளுதல்.</td><td rowspan="2">4.90</td><td>திரு.J.ஆனந்தன் புதுக்கோட்டை</td><td>மதிப்பீட்டை விட 0.09 % குறைவு</td></tr>
<tr><td>திரு.K.பரமசிவம் புதுக்கோட்டை</td><td>மதிப்பீட்டை விட 0.35 % அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு :–</u><br>மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. J.ஆனந்தன் ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.09% குறைவு உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம். (5069/2022/இ1)</td><td>தீர்மான எண்:297<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள் எண்:49</td><td>இந்நகராட்சி வார்டு எண்.7 அடப்பன்வயல் நகராட்சி ஆரம்ப பள்ளியில் உள்ள ஆழ்குழாய் கிணறு சரிந்துள்ளது. இதனால் ஆழ்குழாய் கிணற்றின் நீர்மூழ்கி மோட்டார் வெளியில் எடுக்க இயலவில்லை. எனவே புதிதாக ஆழ்குழாய் கிணறு அமைத்து HDPRE Tank அமைக்கப்பட வேண்டியது அவசியமாகிறது.</td><td>தீர்மான எண்:298<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | இப்பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.2,50,000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:—</u>** மன்றம் அனுமதிக்கலாம். (6507/2022/E1) | |
| பொருள் எண்:50 | இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்படும் கம்பேக்டர் வாகனம் TN-55-AR-4314-க்கு தகுதிச்சான்று காலம் 9/2022-வுடன் முடிவடைவதால் மேற்படி வாகனத்திற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிச்சான்று புதுப்பிக்க வேண்டியுள்ளது.<br>தகுதிச்சான்று புதுப்பிக்க வாகனத்தில் உள்ள பழுதுகள் சீர் செய்ய வேண்டியுள்ளது. வாகனப்பழுதுகள் சீர் செய்ய ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.2,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி செலவினம் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (5847/2022/H2) | தீர்மான எண்:299<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்:51 | புதுக்கோட்டை நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் துாய்மை பணியாளராக பணிபுரிந்து வந்த செல்வி. ரெங்கநாயகி/ வெள்ளையன் என்பவர் 3.6.2021 அன்று பணியிடை காலமாகிவிட்டார். அன்னார் திருமணம் செய்து கொள்ளாமல் இறந்துவிட்டதால் சட்டப்படி வாரிசுதாரராக அன்னாரது சகோதரியான திருமதி. பேபி / வெள்ளையன் என்பவரை குறிப்பிட கோரியும் பணப்பயன் பெற தேவையான வாரிசு சான்றிதழ் வழங்க கோரி மாண்பமை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், புதுக்கோட்டையில் அ.வழக்கு எண்:3/2022ன் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதற்கான வழக்கு கட்டணமாக ரூ.7500/- மட்டும் நகராட்சி வழக்கறிஞர் திரு.ஆர். வெங்கடேசன் என்பவருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம் (எச்4/1067/2022) | தீர்மான எண்:300<br>அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்:52 | புதுக்கோட்டை நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் துப்புரவு பணி மேற்பார்வையாளராக பணிபுரிந்து வரும் திருமதி. சின்னராணி என்பவர் தமது பணிப்பதிவேட்டில் பணியில் சேர்ந்தபோது பிறந்த தேதி 01.07.1964 என பதிவு செய்யப்பட்டுள்ளதை 25.04.1964 என கல்வி சான்றிதழின்படி திருத்தம் செய்ய கோரி மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், புதுக்கோட்டையில் அ.வழக்கு எண்:7/2022 நாள்:17.02.2022ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. அதற்கான வழக்கு கட்டணமாக ரூ.7500/- மட்டும் நகராட்சி வழக்கறிஞர் திரு.ஆர். வெங்கடேசன் என்பவருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம் (எச்4/1297/2022) | தீர்மான எண்:301<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| பொருள் எண்:53 | தற்போது தமிழ்நாட்டில் கொரோனா நோய்பரவல் 4வது அலை அதிகமாகி கொண்டு வருவதை ருத்தில் கொண்டு நோய் தடுப்பு நடவடிக்கையான தடுப்பூசி செலுத்தும் பணியை மீண்டும் விரப்படுத்துமாறு தடுப்பூசி முகாம் நடத்தப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தரிவிக்கப்பட்டது. அதன்படி கீழ்க்கண்ட தேதிகளில் புதுக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட 42 ார்டுகளிலும் பொதுமக்களுக்கு இலவசமாக நகராட்சி பணியாளர்களால் முகாம்கள் அமைக்கப்பட்டும், OBIL CAMP மூலம் ஆட்டோவிலும் வீடுவீடாக சென்றும் பொதுமக்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது. தற்கான செலவு தொகையாக திரு.எஸ். வாஹித்அலி அரசு ஒப்பந்ததாரர் அவர்களால் ணிமேற்கொண்டமைக்கு தேதி வாரியாக தொகைப்பட்டியல் வரப்பட்டுள்ளது.<br><br>**<u>அத்தியாவசிய பணியாக இப்பணி மேற்கொள்ளப்பட்டது:-</u>**<br><br>1. **24.07.2022** அன்று அண்ணாசிலை, பிருந்தாவனம், கோவில்பட்டி, மற்றும் டி.வி.எஸ் கார்னர் ஆகிய 4 இடங்களில் சாமியானா பந்தல் அமைக்கும் பணி மற்றும் ஆட்டோ வாடகை மற்றும் முகாம் பணியாளர்களுக்கு காலை டிபன் மதியம் சாப்பாடு வழங்கிய வகையில் ஆன செலவு தொகை ரூ. 114700**/-**<br>2. **07.08.2022** அண்ணாசிலை, பிருந்தாவனம், கோவில்பட்டி, மற்றும் டி.வி.எஸ் கார்னர் ஆகிய 4 இடங்களில் சாமியானா பந்தல் அமைக்கும் பணி மற்றும் ஆட்டோ வாடகை மற்றும் முகாம் பணியாளர்களுக்கு காலை டிபன் மதியம் சாப்பாடு வழங்கிய வகையில் ஆன செலவு தொகை ரூ. **106700/-**<br><br>மேற்கண்டவாறு 2 முகாம்களுக்கு மேற்கொள்ளப்பட்ட செலவின தொகையாக மொத்தம் ரூ. 221400/-க்கு தொகைப்பட்டியல் திரு. எஸ். வாஹித் அலி ஒப்பந்ததாரரால் வழங்கப்பட்டுள்ளது. அவசர அவசியங்கருதி அத்தியாவசிய பணியாக இருப்பதால் பணி மேற்கொள்ளப்பட்டது. அவசர அவசியங்கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் தொகை வழங்கவும், இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் திரு.எஸ், வாஹித் அலி, அரசு ஒப்பந்ததாரருக்கு ரூ. 221400/- வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**:, மன்றம் அனுமதிக்கலாம். (H1/3082/2022) | **தீர்மான எண்:**302 **அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள் எண்:54 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். **42** அசோக் நகர் முதல் KLKS நகர் OHT வரையிலான பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய் ஏதும் இல்லை என அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கைக்கிணங்க இடத்தை பார்வையிடப்பட்டு உத்தேசமாக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு | **தீர்மான எண்:**303 **அனுமதிக்கப்பட்டது.** |

<table>
<tr>
<td></td>
<td>ரூ.5,00,000/– இலட்சம் ( ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:–</u> மன்றம் அனுமதிக்கலாம். (6273/2022/E1)</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்:55</td>
<td>புதுக்கோட்டை நகராட்சியில் பழைய அலுவலக பதிவறை மற்றும் வருவாய் பிரிவுகளில் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள கழிவு செய்யப்பட்ட (Multilated Papers) காகிதங்கள் 11.08.2022 அன்று ஏலம் விடப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஏலக்கேள்வி கோரப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஏலதாரரின் பெயர் மற்றும் முகவரி</th><th>ஏலக்கேள்வி கிலோ ஒன்றுக்கு</th></tr>
<tr><td>1.</td><td>ஆர். தனபால்,<br>5691, சாந்தநாதபுரம் 2ம் வீதி,<br>புதுக்கோட்டை.</td><td>ரூ. 3.10 பைசா</td></tr>
<tr><td>2.</td><td>ஸ்ரீ கற்பகா விநாயகா ஸ்டோர்ஸ்,<br>SNT காம்ப்ளக்ஸ், ஆலங்குடி ரோடு,<br>புதுக்கோட்டை.</td><td>ரூ. 3.40 பைசா</td></tr>
<tr><td>3.</td><td>ரா. மணிகண்டன்,<br>தெற்கு 3ம் வீதி,<br>புதுக்கோட்டை.</td><td>ரூ. 3.30 பைசா</td></tr>
<tr><td>4.</td><td>ஜி. கே. பேப்பர்ஸ்,<br>உடுமலைப்பேட்டை,</td><td>ரூ. 3.20 பைசா</td></tr>
<tr><td>5.</td><td>கா.நா. ஞானவேல்,<br>5810/1, சாந்தநாதபுரம் 6ம் வீதி,<br>புதுக்கோட்டை.</td><td>ரூ. 3.50 பைசா</td></tr>
</table>
மேற்கண்ட ஏலக் கேள்வியில் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வியாக கிலோ ஒன்றுக்கு ரூ. 3.50 பைசா வரிசை எண். 5ல் கண்டுள்ள , திரு. கா.நா. ஞானவேல், 5810/1, சாந்தநாதபுரம் 6ம் வீதி, புதுக்கோட்டை என்பவர் கோரியுள்ளார் என்ற விபரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு..</u><br><br>வரிசை எண். 5ல் கண்டுள்ள திரு. கா.நா. ஞானவேல், 5810/1, சாந்தநாதபுரம் 6ம் வீதி, புதுக்கோட்டை என்பவரது உயந்தபட்ச ஏலக் கேள்வியை மன்றம் ஏற்று அனுமதிக்கலாம். (6721/2028/D1)</td>
<td>தீர்மான எண்:304<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்:56</td>
<td>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 12 காமராஜபுரம் 32ம் வீதியில் வசிக்கும் மக்களுக்கு பொது தேவைக்கு தண்ணீர் வசதி இல்லாத காரணத்தால் பொது மக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் புதிய மினி பவர்</td>
<td>தீர்மான எண்:305<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

பம்பு அமைத்து தருமாறு கேட்டுகொண்டதற்கிணங்க, புதியதாக மினி பவர் பம்பு அமைக்க உத்தேசமாக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.**2,25,000/–(**ரூபாய் இரண்டு இலட்சத்தி இருபத்தைந்தாயிரம் மட்டும்**)** மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண்:57

நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 24.06.2022 அன்று பெய்த மழை காரணமாக வார்டு எண்.35க்குட்பட்ட கலீப் நகர் பகுதியில் சாலைகளில் தேங்கியுள்ள மழைநீரை அகற்றவும் மற்றும் வடிகால்களில் ஏற்பட்டுள்ள அடைப்புகளை சரி செய்யவும் வேண்டியுள்ளது. மேற்படி பணியினை JCB எந்திரம் கொண்டு மேற்கொள்ளவேண்டியுள்ளதால் வாடகை அடிப்படையில் JCB எந்திரம் கொண்டு பணியினை மேற்கொள்ள அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டு மேற்படி பணிக்கு உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ் கண்டுள்ளவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | பணி விவரம் | வாடகை விவரம் (எரிபொருள் , ஓட்டுநர் கூலி உட்பட) | விலைப்புள்ளி அளித்துள்ள விவரம் | | |
|---|---|---|---|---|---|
| | | | திரு.வே.ராஜேஷ் அஞ்சுகத்தாய் எர்த்மூவர்ஸ் புதுக்கோட்டை | SUN CRANE SERVICE Pudukkottai | Thanjaie Crane Service Thanjvur |
| 2 | JCB எந்திரம் | வாடகை 1 மணி நேரத்திற்கு | ரூ.850/- | ரூ.1000/- | ரூ.1100/- |

மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் அளித்துள்ள நிறுவனமான திரு.வே.ராஜேஷ் அஞ்சுகத்தாய் எர்த் மூவர்ஸ் புதுக்காட்டை நிறுவனத்தின் விலைப்புள்ளியை அங்கீகரித்து பணி உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதையும் அதற்கான செலவினம் கீழ் கண்டுள்ளவாறு மேற்கொள்ளப்பட்டதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணி விவரம் | வாடகை விவரம் | | |
|---|---|---|---|---|
| | | Rate/ Hrs | இயக்கப்பட்ட நேரம் | மொத்தம் |
| 2 | JCB எந்திரம் | ரூ.850/- | 24 Hrs | ரூ.20400.00 |

அலுவலக குறிப்பு

1. மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்:306**
**அனுமதிக்கப்பட்டது.**

| | | |
|---|---|---|
| | 2. மேற்படி செலவினம் ரூ.20400/- நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (6580/2022/H1) | |
| பொருள் எண்:58 | புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட திருக்கட்டளை சாலையில் உள்ள நகராட்சி உரக்கிடங்கில் 08.05.2022 அன்று மதியம் தீவிபத்து எற்பட்டு அதனை அனைக்கும் பணி மேற்கொள்ள அவசர அவசியம் வாடகை அடிப்படையில் JCB எந்திரம் அமர்த்தி பணி மேற்கொள்ளவேண்டியதால் மேற்படி பணியினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டு மேற்படி பணிக்கு உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ் கண்டுள்ளவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. | தீர்மான எண்:307 அனுமதிக்கப்பட்டது. |

| வ. எண். | பணி விவரம் | வாடகை விவரம் (எரிபொருள் , ஓட்டுநர் கூலி உட்பட) | விலைப்புள்ளி அளித்துள்ள விவரம் | | |
|---|---|---|---|---|---|
| | | | திரு.வே.ராஜேஷ் அஞ்சுகத்தாய் எர்த்மூவர்ஸ் புதுக்கோட்டை | SUN CRANE SERVICE Pudukkottai | Thanjaie Crane Service Thanjvur |
| 2 | JCB எந்திரம் | வாடகை 1 மணி நேரத்திற்கு | ரூ.850/- | ரூ.1000/- | ரூ.1100/- |

மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் அளித்துள்ள நிறுவனமான திரு.வே.ராஜேஷ் அஞ்சுகத்தாய் எர்த் மூவர்ஸ் புதுக்காட்டை நிறுவனத்தின் விலைப்புள்ளியை அங்கீகரித்து பணி உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதையும் அதற்கான செலவினம் கீழ் கண்டுள்ளவாறு மேற்கொள்ளப்பட்டதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணி விவரம் | வாடகை விவரம் | | |
|---|---|---|---|---|
| | | Rate/ Hrs | இயக்கப்பட்ட நேரம் | மொத்தம் |
| 2 | JCB எந்திரம் | ரூ.850/- | 31Hrs | ரூ.26350.00 |

அலுவலக குறிப்பு

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. மேற்படி செலவினம் ரூ.26350/- நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (6579/2022/H1)

பொருள் எண்:59

நகராட்சிக்குட்பட்ட சாந்தநாதபுரம் 5-ம் வீதியில் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூராக உள்ள அரளை கற்கள் மற்றும் தகட்டுக்கற்களை அகற்றும் பணியினை ராட்சத கிரேன் எந்திரம் , JCB எந்திரம் மற்றும் டிப்பர் வாகனம் மூலம் அகற்றும் பணியினை உடன் மேற்கொள்ள தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டு மேற்படி பணிக்கு உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ் கண்டுள்ளவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | பணி விவரம் | வாடகை விவரம் ( எரிபொருள் ஓட்டுநர் கூலி உட்பட ) | விலைப்புள்ளி அளித்துள்ள விவரம் | | |
|---|---|---|---|---|---|
| | | | திரு.வே.ராஜேஷ் அஞ்சுகத்தாய் எர்த்மூவர்ஸ் புதுக்கோட்டை | SUN CRANE SERVICE Pudukkottai | Thanjaie Crane Service Thanjvur |
| 1 | ராட்சத கிரேன் இயந்திரம் | வாடகை 1 மணி நேரத்திற்கு | ரூ.1100/- | ரூ.1200/- | ரூ.1200/- |
| 2 | JCB எந்திரம் | வாடகை 1 மணி நேரத்திற்கு | ரூ.850/- | ரூ.1000/- | ரூ.1200/- |
| 3 | டிப்பர் லாரி | வாடகை நாள் ஒன்றுக்கு | ரூ.5500/- | ரூ.6000/- | ரூ.6300/- |

மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் அளித்துள்ள நிறுவனமான திரு.வே.ராஜேஷ் அஞ்சுகத்தாய் எர்த் மூவர்ஸ் புதுக்காட்டை நிறுவனத்தின் விலைப்புள்ளியை அங்கீகரித்து பணி உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதையும் அதற்கான செலவினம் கீழ் கண்டுள்ளவாறு மேற்கொள்ளப்பட்டதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணி விவரம் | வாடகை விவரம் | | |
|---|---|---|---|---|
| | | Rate/ Hrs / Rate / Day | இயக்கப்பட்ட நேரம் | மொத்தம் |
| 1 | கிரேன் எந்திரம் | ரூ.1100/- | 18 Hrs. | ரூ.19800,.00 |
| 2 | JCB எந்திரம் | ரூ.850/- | 21 Hrs | ரூ.17850.00 |
| 3 | டிப்பர் லாரி | ரூ.5500/- | 4 Days | ரூ.22000.00 |
| | | | மொத்தம் | ரூ.59650.00 |

அலுவலக குறிப்பு

1. மன்றம் பதிவு செய்யலாம்.

தீர்மான எண்:308
அனுமதிக்கப்பட்டது.

<table>
<tr>
<td></td>
<td>2. மேற்படி செலவினம் ரூ.59650/- நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (6581/2022H1)</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்:60</td>
<td>இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்படும் கம்பேக்டர் வாகனம் TN55AF-7872-க்கு டயர்கள் பழுதடைந்து வாகனம் இயக்க முடியாத நிலையில் உள்ளது. வாகனத்தில் உள்ள டயர்கள் வாங்கப்பட்டு மூன்று வருடங்களுக்கு மேலானதால் ரீட்ரெடிங் செய்து பயன்படுத்தவும் இயலாத நிலையில் உள்ளது. எனவே மேற்படி வாகனத்திற்கு கீழ் கண்டுள்ள அளவுகள் கொண்ட புதிய டயர்கள் மற்றும் டியூப்கள் வாங்கி பொருத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>வாகனம் எண்</th><th>டயர் அளவு</th><th>எண்ணிக்கை<br>(டயர் ,டியூப், பிளாப்)</th></tr>
<tr><td>1</td><td>TN55AF-7872 கம்பேக்டர் வாகனம்</td><td>2X15-16</td><td>6 செட்</td></tr>
</table>
மேற்கண்ட அளவுகள் கொண்ட டயர்கள் வாங்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.80,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்<br>
மேற்படி செலவினம் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்:309<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்:61</td>
<td>இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்படும் TATA ACE வாகனம் TN-55-BF-1846-க்கு பயன்படுத்தப்படும் பேட்டரியின் திறன் குறைந்து வாகனம் இயக்குவதில் சிரமம் ஏற்படுகிறது. மேற்படி வாகனத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் 12 Volt 65 AH திறன்கொண்ட பேட்டரி 2018 லிருந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது.<br>
எனவே மேற்படி வாகனத்திற்கு 12 Volt 65 AH திறன்கொண்ட புதிய பேட்டரி 1 எண்ணிக்கை புதிதாக வாங்கி பொருத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. புதிய பேட்டரி வாங்குவதற்கான உத்தேச செலவினம் ரூ.10,000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்<br>
2. மேற்படி செலவினம் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (H2/2022/5992)</td>
<td>தீர்மான எண்:310<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| பொருள் எண்:62 | திடக்கழிவு மேலாண்மை திட்டம் சமத்துவபுரம், புவர்ஊறாம், சந்தைப்பேட்டை, போஸ்நகர், மற்றும் சண்முகாநகரில் (எம்.சி.சி.) உரக்கிடங்குகள் மராமத்து பணிகள் மேற்கொண்டு பயன்பாட்டுக்கு கொண்டுவர நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் தெரிவித்துள்ளதற்கிணங்க அவற்றை பராமரிப்பு செய்து பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.10.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசிய தேவை கருதி டெண்டர் கோரி மேல்நவடடிக்கை செய்யவும் அனுமதிக்கலாம் (5851/2022/இ1). | தீர்மான எண்:311 அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்:63 | இந்நகராட்சி வார்டு எண்: 26 RMV நகர் மற்றும் அம்பேத்கார் நகர் ஆகிய தெருக்களில் உள்ள பகிர்மான குழாய் சிதைந்துள்ளதால் அப்பகுதிக்கு குடிநீர் செல்லவில்லை. இதன்பொருட்டு குடிநீர் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே அவசியம் கருதி புதிய குடிநீர் பகிர்மான குழாய் அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.2,35,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். (6891/2022/E1) | தீர்மான எண்:312 அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்:64 | இந்நகராட்சி வார்டு எண்:37 பூங்கா நகர் பகுதியில் மழைநீர் செல்வதற்கு ஏதுவாக போதிய மழைநீர் வடிகால் அமைப்பு இல்லாததால் மழைகாலங்களில் மழைநீர் தெருக்கள் வழியே செல்வதுடன் குடியிருப்பு பகுதிகளில் புகுந்து மக்களின் இயல்பு வாழ்க்கை மிகவும் பாதிப்பு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. எனவே இதனை தவிர்க்கும் பொருட்டு அப்பகுதியில் மழைநீர் வடிகால் அமைப்பது அவசியமாகிறது. எனவே இப்பகுதியில் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.5,00,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:313 அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்:65 | **2022–2023**ம் ஆண்டிற்கு **15**வது நிதி குடிநீர் திட்டம் தலைமை நீரேற்று நிலையம் அம்மையாபட்டி வெள்ளாறில் நீர் உறிஞ்சு கிணறு உரை அமைத்து உள்ளூர் குடிநீர் திட்டம் மேம்பாடு செய்ய அரசுக்கு நிதி மற்றும் நிர்வாக அனுமதி வேண்டி கருத்துரு பிரேரனை அனுப்பப்பட்டுள்ளது.<br>தற்சமயம் CWSS காவேரி கூட்டு குடிநீர் திட்டம் மூலம் வழங்கப்பட்டுவரும் குடிநீர் தினசரி இரண்டு மூன்று தடவைகள் நிறுத்தம் செய்து குடி தண்ணீர் விநியோகம் பாதிக்கப்பட்டுவருகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் உள்ளூர் குடிநீர் ஆதாரம் கண்டறிந்து மேம்பாடு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளதால், புதுக்கோட்டை நகராட்சி **1** முதல் **42** வரையிலான பகுதிகளுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்யப்படவும், அரசு நிதியை எதிர் நோக்கி பொது நிதியில் மேற்படி திட்டப்பணியை மன்ற பொருள் அனுமதி எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று டெண்டர் கோரி மேல்நடவடிக்கை | தீர்மான எண்:314 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | செய்யவும் அனுமதி வேண்டப்படுகிறது. உத்தேச மதிப்பீடு ரூ. 20.00 (இருபது லட்சம் மட்டும்) அம்மையாப்பட்டி குடிநீர் மேம்பாடு செய்தல்<br>**<u>அலுவலக குறிப்பு:–</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி அரசு நிதியை எதிர் நோக்கி பொது நிதியின மற்றும் குடிநீர் நிதியின் கீழ் பணி மேற்கொள்ளவும், மேல்நடவடிக்கை செய்யவும், அனுமதிக்காலம். (6761/2022/E1) | |
| பொருள் எண்:66 | இந்நகராட்சிக்குட்பட்ட கோர்ட் எதிர்புறம் பிரகதம்பாள் பள்ளி சாலை சந்திப்பில் உயர்மின் கோபுர மின் விளக்கு அமைக்கும் பணியானது நமக்க நாமே திட்டம் 2021–22 நிதியின் கீழ் செய்ய உத்தரவு சம்மந்தப்பட்ட ஒப்பந்தகாரரிடம் வழங்கப்பட்டது. மேற்கண்ட இடத்தில் பொதுமக்களின் அத்தியாவசியம் கருதி சாலை பாதுகாப்பு ஒருங்கிணைப்பு கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர், மாவட்ட கண்காணிப்பாளர் அறிவுறுத்தலுக்கிணங்க மச்சுவாடி ஜீவா நகர் பஸ்நிறுத்தம் அருகில் மாற்று இடத்தில் உயர்மின் கோபுர மின்விளக்கு அமைக்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:–</u>** 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நகராட்சி நிர்வாக இயக்குநர், நிர்வாக அனுமதி பெற்று மேல்நடவடிக்கை செய்யவும் அனுமதிக்கலாம் (9880/2022/இ1) | தீர்மான எண்:315 அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்:67 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17 வைரனாச்சி ஊரணி பகுதியில் உள்ள சிமெண்ட் சாலை மற்றும் பக்கவாட்டு சுவர் சேதமடைந்துள்ளது என்று பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் கொடுக்கப்பட்ட மனுவின் அடிப்படையில் இடத்தை ஆய்வு செய்யப்பட்டு உத்தேசமாக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.45,000/– (ரூபாய் நாற்பத்தைந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:–</u>** மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:316 அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்:68 | இந்நகராட்சி வார்டு எண்:41 EVR நகரில் உள்ள குறுக்கு சாலையில் பேட்ச் அதிக அளவில் உள்ளதால் மழைக்காலங்களில் மழைநீர் வீட்டுக்குள் புகுந்துவிடும் அபாயம் உள்ளது எனவே வெட்மிக்ஸ் அமைத்து தர ரூ.2,55,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண்:317 அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்:69 | புதுக்கோட்டை நகராட்சியில் 2022-2023ம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 28.07.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது. | தீர்மான எண்:318 அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வ.<br>எ<br>ண்</th><th>பணிகளின் விவரம்</th><th>மதிப்பீடு<br>ரூபாய்<br>லட்சத்தில்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்<br>(திருவாளர்கள்)</th><th>ஒப்பந்தப்புள்ளி<br>விகிதம்</th></tr>
<tr><td rowspan="2">1)</td><td rowspan="2">இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:8 மேல 2 வீதி ராமச்சந்திரன்பிள்ளை, ரைஸ்மில் சந்து ஆகிய பகுதிக்கு புதியதாக பகிர்மானக்குழாய் அமைத்தல்</td><td rowspan="2">2.40</td><td>திரு.ஆர். மணிகண்டன் புதுக்கோட்டை</td><td>மதிப்பீட்டை விட 0.10 % குறைவு</td></tr>
<tr><td>திரு.பி.சின்னக்கருப்பையா புதுக்கோட்டை.</td><td>மதிப்பீட்டை விட 1.04 % அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு :–</u><br>
மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ஆர். மணிகண்டன் ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.10% குறைவு உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம். (5073/2022/இ1).
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்:70</td>
<td>நகராட்சி வார்டு எண்: 33க்கு உட்பட்ட சத்தியமூர்த்தி நகர் பகுதியில் பொதுமக்கள் தண்ணீர் தேவையின் அவசியம் கருதி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு புதிய சிறுமின்விசை பம்பு அமைக்க அப்பகுதி நகர்மன்ற உறுப்பினரால் மனு அளிக்கப்பட்டதன்படி மேற்படி இடம் நேராய்வு செய்யப்பட்டது. அதன்படி அப்பகுதி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு புதியதாக சிறுமின்விசை பம்ப் அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.2,25,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு: 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2.மேற்படி செலவினம் குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் இருந்து<br>
மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்</td>
<td>தீர்மான எண்:319<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்:71</td>
<td>புதுக்கோட்டை நகராட்சியில் தமிழ்நாடு தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் 2014-2015 ம் ஆண்டில் சாலையோர வியாபாரிகளின் சமூக பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்திட இத்திட்டம் அறிமுகமானது 2022-2023 ம் ஆண்டு நடப்பாண்டில் புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு மீண்டும் புதிய அடையாள அட்டை வழங்கப்பட்டு அவர்கள் எவ்வித சிரமமின்றி வியாபாரம் செய்வதற்கு ஏற்ற சூழல் உருவாக்கப்பட்டு கொடுப்பதற்கு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ந.க.எண்.20789/2021/UPA1நாள்.16.06.2022ன் கடிதத்தில் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 20.06.2022 ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி அறிவிக்கை கொடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் இரண்டு நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் 04.07.2022 ல் வரப்பெற்றுள்ளது. அதன்</td>
<td>தீர்மான எண்:320<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

விபரம் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின்பெயர் | விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1. | Sward Solutions<br>No.64 மறைமலை நகர்<br>கடையக்குடி (Po)<br>புதுக்கோட்டை | புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட அனைத்து சாலையோர வியாபாரிகளின் பயோ மெட்ரிக் முறையில் அவர்களின் புவிசார் தகவல்கள் (Geo Information) பதிவு செய்து அவற்றிற்கு (Geo-Mapping) தயார் செய்யவும், QR Code –வுடன் பயோமெட்ரின் அடையாள அட்டை, விற்பனை சான்றிதழ், வியாபாரிகளின் நகர எல்லைக்குள்ளான விற்பனை திட்டம் (Street Vending Plan) உருவாக்கித் தருதல் விரிவான செயல்முறை திட்டம் (Detailed Implementation Plan) உருவாக்கித் தருதல் ஆகிய அனைத்து தரவுகளை (MIS Data Base) முழுமையாக தயார் செய்து கொடுக்கும் பணிக்கு | ரூ.600/- |
| 2. | மிரிபிசியல் கேரியர்ஸ்<br>12A இரண்டாவது தளம்<br>K.K.பில்டிங்<br>T.நகர் ராமநாதபுரம்<br>கோயம்புத்தூர். | - do - | டெபாசிட் செலுத்தாததால் நிறுத்தப்பட்டுள்ளது |

| | | |
|---|---|---|
| | எனவே Sward Solutions நிறுவனத்தினர் முன் வைப்புத் தொகை ரூ.1,00,000/- மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவம் ரூ.10,000/-ம் செலுத்தி குறைந்த ஒப்பந்தப்புள்ளி ரூ.600/-க்கும் ஒரு நபருக்கு சாலையோர வியாபாரிகளின் கணக்கெடுத்து கொடுக்க ஒப்பந்தம் செய்துள்ளார் அன்னாருக்கு இவ்ஒப்பந்தத்தினை ஏற்று வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு:**<br>மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் வழங்கியுள்ள இரண்டு நிறுவனங்களில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை வழங்கிய Sward Solutions என்ற நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியில் ரூ.600/- ( ஒரு நபருக்கு ) செலவில் கணக்கெடுப்பு எடுத்து கொடுக்க மன்றம் அனுமதி வழங்கலாம். (4754/2022/F3) | |
| பொருள் எண்:72 | புதுக்கோட்டை நகராட்சியில் உள்ள தமிழ்நாடு தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் வரும் சாலையோர வியாபாரிகள் பயோ மெட்ரிக் (Bio Metric) முறையில் கணக்கெடுக்கவும், அவர்களின் புவிசார் தகவல்கள் (Geo Information) பதிவு செய்து அவற்றிற்கு (Geo-Mapping) தயார் செய்யவும், QR Code –வுடன் பயோமெட்ரின் அடையாள அட்டை, விற்பனை சான்றிதழ், வியாபாரிகளின் நகர எல்லைக்குள்ளான விற்பனை திட்டம் (Street Vending Plan) உருவாக்கித் தருதல் விரிவான செயல்முறை திட்டம் ஏற்படுத்துதல் (Detailed Implementation Plan) ஆகிய அனைத்து தரவுகளை (MIS Data Base) முழுமையாக ( Soft and Hard Copy ) தயார் செய்து, தயாரிக்கும் பணியை சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ந.க.எண்.20789/2021/UPA1,நாள்.16.06.2022ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளியை பத்திரிக்கை செய்தியில் தினத்தந்தி விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. ஆகையால் விளம்பரம் செய்ததற்கு ரூ.11,151/– யை தினத்தந்தி பத்திரிக்கை செய்தி நிறுவனத்திற்கு SUSV தலைப்பின் கீழ் உரிய தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (4754/2022/F3) | தீர்மான எண்:321<br>அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்:73 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு 1 முதல் 42 வார்டு வரையில் உள்ள பகுதிகளுக்கும் காவேரி கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமும், மற்றும் அம்மையாப்பட்டி உள்ளூர் நீராதாரம் மூலம் (34p. 35p. 36p. 37p. 38. 39 பகுதிகளுக்கு) குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.<br>தற்சமயம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் காவேரி கூட்டு குடிநீர் திட்டத்தில் வழங்கப்படும் குடிநீர் மின்தடை மற்றும் குழாய் உடைப்பு பழுது ஏற்படுவதால் தினசரி மூன்று, நான்கு முறைகளுக்கு தடைபட்டு நிறுத்தம் செய்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் சமச்சீரான இடைவெளியில் குடிநீர் வழங்க முடியாத நிலையும், சுழற்சிமுறையிலும் விநியோகம் செய்யப்படும் | தீர்மான எண்:322<br>அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | பகுதிகளில் மேடான இடங்கள் மற்றும் சப்ளை பகுதியில் கடை தெருவில் உள்ள வீடுகளுக்கு தண்ணீர் விநியோகம் தடைபட்டு வருகிறது.<br>மேற்படி காவேரி கூட்டு குடிநீர் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குடிநீர் திட்ட மேம்பாடு செய்ய அரசு அனுமதி ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டு விரைவில் பணிமேற்கொள்ளப்படும் நிலையில், புதுக்கோட்டை நகராட்சிக்கு மேற்படி திட்டத்தில் வழங்கப்படும் குடிநீர் சுமார் ஆறு மாதம் முதல் 12 மாத காலங்கள் வரை தண்ணீர் வழங்கப்படுவது நிறுத்தம் செய்யப்பட வேண்டிய சூழ்நிலை உள்ளதாக செயற் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் உள்ளூர் நீராதாரம் மேம்பாடு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளதால், ஆணையாளர், நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுரைக்கிணங்க, புதியதாக நீராதாரம் கண்டறியவும் அவற்றிற்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து பிரேரணை கருத்துரு அரசு நிதி பெறும் பொருட்டு ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளதால் தகுதி வாய்ந்த தொழில்நுட்ப ஆலோசக நிறுவனம் Sree Ragu Contracts & Consultancy Ast நிறுவனம், மேற்படி பணிக்கு இசைவு தெரிவித்து. மேற்படி நிறுவனதிற்கு நியமனம் வழங்கி செயல்படுத்தவும், திட்ட வடிவைப்புக்கு உண்டாகும் 1% of மதிப்பீட்டு தொகையினை வழங்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** .. மன்றம் அனுமதிக்கலாம் ( 4367/2022/E1) | |
| பொருள் எண்:74 | இந்நகராட்சி திருக்கோகர்ணம் நடுநிலைப்பள்ளியில் குழந்தைகளுக்கு காலை சிற்றுண்டி ஆரம்பப் பள்ளிகளுக்கு மட்டும் 8 பள்ளிகளுக்கு வழங்கும்பொருட்டு மேற்கண்ட இடத்தை தேர்வு செய்யப்பட்டு கட்டிடப்பணி நடைபெற்று வருகிறது. அணுகுசாலை தேவைப்படுகிறது. எனவே கான்கிரீட் பேவர் பிளாக் சாலை அமைக்க தோராயமாக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3,00,000/- (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு தேவைப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (6779/2022/E1) | தீர்மான எண்:323 அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்:75 | இந்நகராட்சி திருக்கோகர்ணம் நடுநிலைப்பள்ளியில் குழந்தைகளுக்கு காலை சிற்றுண்டி ஆரம்பப் பள்ளிகளுக்கு மட்டும் வழங்கும் பொருட்டு மேற்கண்ட இடத்தை தேர்வு செய்யப்பட்டு கட்டிடப்பணி நடைபெற்று வருகிறது. கட்டிடம் முன்புறம் முகப்பு வளைவு அமைக்க தோராயமாக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும் ) மன்றத்தின் அனுதிக்கு வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். (6781/2022/E1). | தீர்மான எண்:324 அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்:76 | இந்நகராட்சி திருக்கோகர்ணம் நடுநிலைப்பள்ளியில் குழந்தைகளுக்கு காலை சிற்றுண்டி 8 ஆரம்பப் பள்ளிகளுக்கு மட்டும் வழங்கும் பொருட்டு மேற்கண்ட இடத்தை தேர்வு செய்யப்பட்டு கட்டிடப்பணி நடைபெற்று வருகிறது. அதற்கு | தீர்மான எண்:325 அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr><td></td><td>குடிநீர் பணிக்கு தோராயமாக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2,50,000/- (ரூபாய் இரண்டு லட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும் ) மன்றத்தின் அனுதிக்கு வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (6780/2022/E1).</td><td></td></tr>
<tr><td>பொருள் எண்:77</td><td>புதுக்கோட்டை நகராட்சியில் உள்ள பேருந்துநிலைய வளாகம் 1981-ம் ஆண்டில் கட்டப்பட்டு உள்ளதில் தற்சமயம் கடைகள் வணிக வளாகம் பகுதி கட்டிடம் தூண்கள் , பீம் மற்றும் கூடார காண்கிரீட் பகுதிகளில் வெடிப்பு ஏற்பட்டும் , கம்பிகள் அறிக்கப்பட்டு உடைந்தும் உள்ளதால், பொதுமக்கள் மற்றும் கடை வியாபாரிகள் பாதிக்கப்பட்டு உள்ளனர். மேற்படி கட்டிடத்தினை தாங்கும் உறுதித்தண்மையை NITT கல்லூாரி பேராசிரியர் திருச்சி அவர்கள் கல ஆய்வு செய்து அறிக்கை வழங்கப்பட்டுள்ளதில் மேற்படி கட்டிடம் பயன்படுத்த முடியாத நிலை உள்ளது எனவும் ,கட்டிடத்தினை முழுமையாக இடித்து புதிய கட்டுமானம் செய்யவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br><br>எனவே மேற்படி கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தவும் , புதிய கட்டுமான பணிக்கு திட்ட மதிப்பீடு தயார் செய்து அரசு ஒப்புதல் பெறும் பொருட்டு தொழில்நுட்ப ஆலோசக நிறுவனம் சென்னை கிளென்ஜி இசைவு தெரிவித்துள்ளதால், மேற்படி நிவனத்திற்கு திட்ட மதிப்பீடு தயார் செய்து வழங்குவதற்கு நியமன ஆணை வழங்குவது குறித்தும் அதற்கான செலவினம் திட்டமதிப்பீட்டில் 0.75% சதவீதம் மற்றும் சேவை வரி வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>அவசிய தேவை கருதி மேற்படி கட்டுமானத்தை உபயோகிப்பாளர்களை வருவாய் பிரிவு மூலம் அப்புறப்படுத்தி பாதுகாப்பு நடவடிக்கை செயயவும், மேற்படி கட்டிடத்தினை பொதுப்பணித்துறை விலை விகிதப்படி உத்தேச மதிப்பீடு செய்து இடித்து அப்புறப்படுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>புதிய கட்டுமானம் செய்ய விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்து அரசு ஒப்புதல் பெற தொழில்நுட்ப நிறுவனத்திற்கு நியமன ஆணை வழங்கி பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (4816/2022/E1).</td><td>தீர்மான எண்:326<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள் எண்:78</td><td>இந்நகராட்சி கீழ்கண்ட பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறையினை சரி செய்யும் பொருட்டு நகர்மன்ற தலைவர் அவர்கள் ஆழ்குழாய் கிணறு மற்றும் சிறுமின் விசை பம்பு அமைக்கும் பணி மற்றும் குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு<br><br><table><tr><td>வ.எண்</td><td>பணியின் பெயர்</td><td>மதிப்பீடு</td></tr><tr><td>1</td><td>பேருந்து நிலையம் அருகில் பெரியார் நகர் செல்லும் சாலை</td><td>ரூ.2.00</td></tr><tr><td>2</td><td>வார்டு எண். 30 காமராஜபுரம் 31ம் வீதியில்</td><td>ரூ.2.00</td></tr><tr><td>3</td><td>வார்டு எண். 34 திருவள்ளுவர் நகர் 3ம் வீதி</td><td>ரூ.2.00</td></tr><tr><td>4</td><td>வார்டு எண். 18 சேஷையா சாலை</td><td>ரூ.2.00</td></tr><tr><td>5</td><td>வார்டு எண். 15 கணேஷ் நகர் 1ம் வீத</td><td>ரூ.2.00</td></tr></table></td><td>தீர்மான எண்:327<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>

| | | |
|---|---|---|
| 6 | வார்டு எண். 6 மாமுண்டி மடத்தெரு | ரூ.2.25 |
| 7 | வார்டு எண். 38 மீனாட்சி நகரில் பகிர்மானக்குழாய் அமைத்தல். | ரூ.5.00 |

**<u>அலுவலக குறிப்பு:–</u>** மன்றம் அனுமதிக்கலாம். (5862/2022/E1)</td><td></td></tr>
<tr><td>பொருள் எண்:79</td><td>புதுக்கோட்டை நகராட்சியில் 2020-2021ம் ஆண்டு தீர்மான எண்:613 நாள்:24.02.2021ல் அனுமதிக்கப்பட்டது. கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 26.02.2021 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>

| வ. எ ண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1) | புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட ஆயுதப்படை மைதானம் அருகில் பள்ளிவாசல் வழியாக செல்லும் மழைநீர் வடிகால் மராமத்து பணி செய்து பக்க சுவர் அமைத்தல் | 3.50 | திரு.எஸ்.வாகித் அலி புதுக்கோட்டை | மதிப்பீட்டை விட 0.06 % குறைவு |
| | | | திரு.எம்.ரவிசங்கர் புதுக்கோட்டை | மதிப்பீட்டை விட 1.45 % அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு :–</u>** மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எஸ்.வாகித் அலி ஒப்பந்தக்கார் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.06சதவீதம் குறைவுக்கு தனி அலுவலரால் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம் (1254/2021/E1)</td><td>தீர்மான எண்:328 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள் எண்:80</td><td>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:21 திருவப்பூர் காட்டுமாரியம்மன்கோவில் மற்றும் அங்கன்வாடி பகுதிகளில் உள்ள சிறுமின்விசைபம்பு முற்றிலும் பழுதடைந்தது பயன்படுத்தமுடியாமல் உள்ளது. மேற்கண்ட இடத்தில் உள்ள மக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கைக்கிணங்க புதிதாக சிறுமின்விசைபம்பு அமைக்க உத்தேசமாக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2,50,000/- (ரூபாய் இரண்டு லட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்).<br>**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம் (6744/2022/இ1).</td><td>தீர்மான எண்:329 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள் எண்:81</td><td>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:39 நியூடைமண்ட் நகர் குறுக்கு சாலையில் பகிர்மான குடிநீர் குழாய் இல்லாததால் அப்பகுதி நகர்மன்ற உறுப்பினர் கொடுக்கப்பட்ட மனுவின் அடிப்படையில் மேற்கண்ட இடத்தை பார்வையிடப்பட்டு உத்தேசமாக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4,90,000/- (ரூபாய் நான்கு லட்சத்தி தொன்னுராயிரம் மட்டும்) மன்றத்தின் அனுதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம் (6739/2022/இ1)</td><td>தீர்மான எண்:330 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள்</td><td>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:3 மாப்பிள்ளையார்குளம் முதல் வீதியில் உள்ள சிறுமின்விசை பம்பு பழுதடைந்து</td><td>தீர்மான எண்:331</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| எண்:82 | உபயோகப்படுத்த முடியாமல் உள்ளது. ஆகவே அப்பகுதியில் உள்ள மக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கைக்கிணங்க புதியதாக சிறுமின்விசைபம்பு அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேசமாக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1,85,000/- (ரூபாய் ஒரு லட்சத்தி என்பதைந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம் (6893/2022/இ1) | அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்:83 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:3 வ.வு.சி நகர் 3ம் வீதியில் உள்ள சிறுமின்விசை பம்பு பழுதடைந்து மண்ணில் புதைந்து உபயோகப்படுத்த முடியாமல் உள்ளது. ஆகவே அப்பகுதியில் உள்ள மக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கைக்கிணங்க புதியதாக சிறுமின்விசைபம்பு அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேசமாக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1,85,000/- (ரூபாய் ஒரு லட்சத்தி என்பதைந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம் (6892/2022/இ1) | தீர்மான எண்:332 அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்:84 | இந்நகராட்சியில் IUDM Eco பூங்கா அமைக்கும் பணி சத்தியமூர்த்தி சாலையில் உள்ள பூங்காவில் மதிப்பீடு ரூ.900.25 இலட்சத்தில் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியில் 90 சதவீதம் பணிகள் முடிவடைந்த நிலையில், IUDM திட்ட நிதியில் இருந்து இந்நகராட்சிக்கு ரூ.100.00 இலட்சம் மட்டுமே வரப்பெற்றுள்ளது. மீதமுள்ள தொகை விடுவிக்கப்படாமல் உள்ளது. இந்நிலையில் இந்நகராட்சிக்கு 7.8.2022 அன்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலக இணை இயக்குநர் அவர்கள் நடைபெற்று வரும் பணிகள் போக துவங்கப்படவுள்ள மீத பணிகளுக்கு மொத்த மதிப்பீட்டில் உள்ள தொகையினை துவங்கப்படாத பணிகளுக்கு CGF நிதியில் கோருமாறு தெரிவித்ததின்படி 1) முன் முகப்பு வளைவு தோரணவாயில் (Arch) 2) வானங்கள் நிறுத்துமிடம் 3) வடிகால் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.1,45,00,000/-க்கு (ஒரு கோடியை நாற்பத்தைந்து லட்சம் மட்டும்) CGF நிதியில் மாற்றி வழங்கிட நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கோரலாம் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (6764/2022/இ1) | தீர்மான எண்:333 அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |

**ஒம்/. செ . திலகவதி, பி.காம்.,**
**நகர்மன்றத் தலைவர்,**
**நகர்மன்றம், புதுக்கோட்டை.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்**
**புதுக்கோட்டை நகராட்சி.**